நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூபா 6-00

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாசி 29 [15-10-1993] வெள்ளிக்கிழமை ஓசை 239

## மோட்டார் ஊர்தி பதிவு 23 ஆம் திகதியுடன் முடிவு

மோட்டார் ஊர்தி பதிவின் காலஎல்லை இம் மாதம் 23ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. எனவே யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து மோட்டார் ஊர்தி உரிமையாளர்களும் தங்கள் ஊர்திகளை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சிறிலங்காவால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும், மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் மேற்கொள்ள வருபவர்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு படுகொலைகள்

# ராணுவ அதிகாரிகளே பொறுப்பு

## மனித உரிமைகள் குழு குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக இடம் பெற்ற பொதுமக்கள் படுகொலைகளுக்கு இராணுவ உயர் அதிகாரிகளே காரணம் என மனித உரிமைகள் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளார்.**

கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன் எம்பிலிப்பிட்டியவில் 32 பாடசாலை மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை, வந்தாறுமூலை இராணுவ முகாமில் வைத்து 158 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை, வண்ணாத்தி ஆற்றுப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 16 விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டமை ஆகிய படுகொலைகளுக்கு இராணுவத்தினரே காரணம் என அவர் குற்றம் சாட்டினார்.

சிறிலங்காவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு தற்போதைய அரசு பிறப்பித்திருக்கும் அவசரகாலச்சட்டமே பிரதான காரணமாகவுள்ளது எனவும் அவர் கூறினார்.

## கொழும்பு துறைமுகமூடாக புலிகளுக்கு ஆயுதங்களாம்

### கட்டுப்படுத்த அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்கள் என்று சிறிலங்கா அரசு நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் கடும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள கப்பற் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிகார உத்தரவிட்டுள்ளார்.

## வெள்ளைப் பிரம்பு தினம் இன்று அனுஷ்டிப்பு

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு இன்றும் வரும் திங்கட்கிழமையும் வெள்ளைப் பிரம்பு பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் உரைநிகழ்ச்சிகளையாழ்விழிப்புலனற்றோர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது இவ் இருநாட்களிலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்கள் உரை நிகழ்த்துவர் இந் நிகழ்ச்சிகள் யாழ் லயன்ஸ் கழகம், யாழ் வட்ட லியோகழகம் என்பவற்றின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## மிதிவெடியில் சிக்கிய லான்ட்மாஸ்டர் சேதம்

### உரிமையாளரும் காயம்

[தொல்புரம்]

லான்ட்மாஸ்டர் ஒன்று மிதிவெடியில் சிக்கியதால் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் ... தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கியதில் வாகனம் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் வாகனத்

## எறிகணை வீச்சு

[தென்மராட்சி]

ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு கிளாலி கடற்கரைநோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கடற்படை விசைப்படகுகள் பீரங்கி கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. (86)

## வீரச்சாவு

## புத்தளம் மாவட்டத்தில் 20 தமிழர் கைது

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் உடப்பு கிராமத்தை நள்ளிரவு வேளை திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் 20 தமிழரைக் கைது செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர் அக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய ஐவரும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## தாழ்வுபாடு கடற்பரப்பில் 125 மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தாழ்வுபாடு கடற்பரப்பில் கடலட்டை பிடித் ... த்து இவர்கள் கரையை வந்தடைந்த போது அங்கு நின்ற பொலிசார் இவர்களை கைது செய்து கொண்டு சென்று தடு

## கொழும்பு துறைமுகமூடாக புலிகளுக்கு ஆயுதங்களாம்

### கட்டுப்படுத்த அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்கள் என்று சிறிலங்கா அரசு நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் கடும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள கப்பற் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிகார உத்தரவிட்டுள்ளார்.

## வெள்ளைப் பிரம்பு தினம் இன்று அனுஷ்டிப்பு

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு இன்றும் வரும் திங்கட்கிழமையும் வெள்ளைப் பிரம்பு பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் உரை நிகழ்ச்சிகளையாழ் விழிப்புலனற்றோர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது இவ் இருநாட்களிலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்கள் உரை நிகழ்த்துவர் இந் நிகழ்ச்சிகள் யாழ் லயன்ஸ் கழகம், யாழ் வட்ட லியோகழகம் என்பவற்றின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## மிதிவெடியில் சிக்கிய லான்ட்மாஸ்டர் சேதம்

### உரிமையாளரும் காயம்

[தொல்புரம்]

லான்ட்மாஸ்டர் ஒன்று மிதிவெடியில் சிக்கியதால் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் அதன் உரிமையாளரும் காயமடைந்தார்.

பண்டத்தரிப்பு பெரியவிளான் வீதியிலுள்ள இடம்பெயர்ந்த குடும்பமொன்றின் வீட்டுச் சாமான்களை ஏற்றச் சென்ற லான்ட்மாஸ்டர் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கியதில் வாகனம் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் வாகனத்தின் உரிமையாளரான இராசரத்தினம் என்பவரும் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (41)

## இந்திய மீனவர் பாதுகாப்பு டில்லியில் இன்று மாநாடு

(டில்லி)

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இன்று புது டில்லியில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் வெளியுறவுச் செயலர் பெர்னாட் திலகரட்ன நேற்று இந்தியா சென்றார். இன்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. டிக்ஸிற் உடன் இவர் விரிவாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என கொழும்பிலுள்ள இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்,

இதேவேளை இந்திய மீனவர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா கடற்படையினர் சுட்டுக் கொன்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்த வெளியுறவுத்துறை அமைச்சர் சாகுல்ஹமீட் உத்தரவிட்டுள்ளார். இதுபோன்ற சம்பவம் இனிபும் நடைபெறாது என்று சிறிலங்கா அரசு உறுதியளித்துள்ளது. இப்பேச்சுகளில் சிறிலங்கா கடற்படை தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் கலந்துகொண்டனர்.

## பம்பாயில் ரயில் விபத்து 40 பெண்கள் சிதறிப் பலி

(பம்பாய்)

பம்பாயில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கோர ரயில் விபத்தொன்றில் 40 பெண்கள் சிதறிப் பலியானதுடன் மேலும் 60பேர் படுகாய மடைந்தனர்.

இவர்கள் பயணம்செய்து கொண்டிருந்த ரயில் பெட்டி திடீரென தீப்பற்றிக்கொண்டதாகவும் இதிலிருந்து தப்பிக் கொள்ள பயணிகள் ஓடும் ரயிலிலிருந்து குதித்த போது அருகே வந்த மற்றைய ரயில் இவர்களை சிதறடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மனித உரிமைகள் குழு குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற பொதுமக்கள் படுகொலைகளுக்கு இராணுவ உயர் அதிகாரிகளே காரணம் என மனித உரிமைகள் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளார்.**

கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன் எம்பிலிப்பிட்டியவில் 32 பாடசாலை மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை, வந்தாறுமூலை இராணுவ முகாமில் வைத்து 158 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை, வண்ணாத்தி ஆற்றுப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 16 விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டமை ஆகிய படுகொலைகளுக்கு இராணுவத்தினரே காரணம் என அவர் குற்றம் சாட்டினார்.

சிறிலங்காவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு தற்போதைய அரசு பிறப்பித்திருக்கும் அவசர காலச்சட்டமே பிரதான காரணமாகவுள்ளது எனவும் அவர் கூறினார்.

## எறிகணை வீச்சு

[தென்மராட்சி]

ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு கிளாலி கடற்கரைநோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கடற்படை விசைப்படகுகள் பீரங்கி கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. (86)

## வீரச்சாவு



வீரவேங்கை வாணவன்

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்தில் மூதூர் மின்வெட்டி கங்கை காட்டுப்பகுதிக்குள் பிரவேசித்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது விடுதலலப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை வாணவன் (துரைராஜா யோகேஸ்வரன் - 6ஆம் வட்டாரம், கட்டைபறிச்சான் மூதூர்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## புத்தளம் மாவட்டத்தில் 20 தமிழர் கைது

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் உடப்பு கிராமத்தை நள்ளிரவு வேளை திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் 20 தமிழரைக் கைது செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 15பேர் அக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய ஐவரும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## தாழ்வுபாடு கடற்பரப்பில் 125 மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தாழ்வுபாடு கடற்பரப்பில் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 125 மீனவர்கள் மன்னார் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடலட்டை பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை அங்கு வந்த கடற்படையினர் இவர்களை கரைக்கு செல்லுமாறு உத்தரவிட்டனராம். இதனை அடுத்து இவர்கள் கரையை வந்தடைந்த போது அங்கு நின்ற பொலிசார் இவர்களை கைது செய்து கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர்.

கடலில் மீன் பிடிப்பதற்கு கடற்படை கொமாண்டரின் உத்தரவை இவர்கள் பெறவில்லை என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ள போதிலும் முன் அனுமதி பெற்றே கடலில் இறங்கியதாக கைதானவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மண்மீட்புப் போருக்கென புலிகளுடன்

## தனது மற்றொரு மகனையும் இணைத்த மாவீரனின் தந்தை

(தென்மராட்சி)

முல்லை மாவட்டத்தில் சென்ற செவ்வாயன்று வீரச்சாவடைந்த 2ஆம் லெப். காந்தனின் தந்தையார் தனது அடுத்த மகனையும் மண்மீட்புப் போருக்கென விடுதலைப் புலிகளுடன் இணைத்துள்ளார்.

நேற்று பிற்பகல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற 2ஆம் லெப். காந்தன் (தர்மகுலசிங்கம் பிரதீபன், மாசார் பளை) என்னும் மாவீரனின் இறுதி நிகழ்வு நடைபெற்று முடியும் போது அம் மாவீரனின் தந்தையார் தனது அடுத்த மகனை அரசியல் துறைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எழுது வினைஞர் சேவைக்கான நேர்முகப் பரீட்சை

(நமது நிருபர்)

எழுது விளைஞர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்பத்திலிருந்து விண்ணப்பித்தோருக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

1992 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு தோற்றி 109க்கும் 88க்கும் இடையில் புள்ளிகளைப் பெற்றொருக்கே இந்நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. மேலும் இவர்கள் விண்ணப்பிக்கும் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களாக இருந்திருக்க

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆண்டு – 4 பரீட்சை**

1994 புலமைப்பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி. ப 3 மணிக்கு நடாத்தப்படும் தொடர் பரீட்சையின் 13 வது பரீட்சை 16 - 10 - 93 சனிக்கிழமை நடைபெறும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ் இந்து அருகில். கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7704)

**விற்பனைக்கு**

LUMALA BOYS பைசிக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு நேரில் பார்வையிடலாம். 35/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (6281)

**நீமாரொக்ஸ் நுளம்பு விரட்டி**

குப்பி விளக்கில் விட்டு எரிக்க ஒளிதரும் விளக்காகவும்விளக்கிலிருந்து கிளம்பும் புகை நுளம்பு விரட்டியாகவும் பயன் தருகிறது. நீமாரொக்ஸ் பாவித்து நிம்மதியாகத் தூங்குங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது, போத்தல் ரூபா. 90/-. டசின் போத்தல் கொண்ட பெட்டி ரூ. 960/-. ஒரு மில்க்வைற் தயாரிப்பு (சி. 7588)

**இன்று சனி [மகரத்திற்கு] வக்கிரமாற்றம்**

25 நாட்கள் சஞ்சரித்த பின் மீண்டும் கும்பத்திற்கு (10 11 93) சனிமாற்றம்வியாழன், சனி மாற்றங்கள். ரூபா 10/- எங்கும் கிடைக்கும் கனகா ரேடர்ஸ்திருநெல்வேலி (நூலாசிரியர் ''சத்யா'' கட்டுடை) (6290)

**மகாதேவா ஜோதிடம்**

உண்மையான பலனை அறியுங்கள். 239, ஆஸ்பத்திரிவீதி, (சத்திரச்சந்தி) காலை10.00-1.00. 140''செல்லர்'' வீதி, கல்வியங்காடு மாலை 3.00-6.00 வரை சந்திக்கலாம். (6291)

**''வித்தியாரம்பம் – மரநடுகை''**

வித்தியாரம்பத்திற்கு அரிச்சுவடி ஏடுகள், மரநடுகைக்கு மரக்கன்றுகள் தருகின்றோம். மரக்கன்றுகள் பதிய வைப்பதற்கு அவசியமாக வெற்றுப் பால்மா பக்கெற்றுகள் தந்து உதவுங்கள். ''மில்க்வைற்'' (சி-7707)

**தவறிவிட்டது**

1740 ரூபா பெறுமதியான வைப்புச் சான்றிதழ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். Mr. Arumuham Kaneshamoorthy, Arulmani Bakery, Pidariyamman Kovil-ady, Kokuvil West, Kokuvil. F D No. 93 J. 2899. B-r No, 166349. (6289)

**லலிதா சகஸ்ர நாமம்**

லலிதா சகஸ்ரநாமம(கிரந்த லீபி) வெளிவந்துள்ளது. சுப்பிரமண்ய சகஸ்ர நாமமும் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்க. சோ. நிர்மலேஸ்வரசர்மா முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி 7545)

**அறிவுக் களஞ்சியம்**

சிறப்புப்

பொது அறிவுப்போட்டியின்

**வினாடி வினாப் போட்டியும் —**

★ **பரிசளிப்பு விழாவும்**

16 - 10 - 93 சனி காலை 9. 50 க்கு யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில். அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். 6285

**RAJAH ROTARY OIL MILL**

மேற்படி எண்ணெய் ஊற்றும் இயந்திரச் செக்கு விற்பனைக்கு உண்டு

தொடர்புகொள்ளவும்:

**திரு. V. சிவசுப்பிரமணியம்,**
''தேவி அகம்''
1-ம் கட்டை,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி-7702)


## நாடு வாழத் தனையீந்த நாயகனின் திறம் போற்றும்



பிறப்பு : 31-12-1973

வீரச்சாவு : 31-08 1993

## கப்டன் இரும்பொறை (ஆதி)

**(இராசையா ஜெகதீஸ்வரன்)**

(தையிட்டி காங்கேசன்துறை)

ஈழ மண்ணில் அடிமைவிலங்குடைக்க
காவிய நாயகன் புலி படையினில்
ஆதி களம் பல ஆடினாய்
ஈழ அன்னையின் காவலரணாய்
எல்லையில் எதிரியை காத்திருந்தாய் ஆதி
நீயும் மாவீரன் ஆனாயே !

இன்று (15-10-93) வெள்ளி எமது இல்லத்தில் நடைபெறும் 45-ம் நாள் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மறவாமல் மனமுருகும்
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அண்ணி,
பெறாமகள் – அபிரா
மருமகன் – பிரவீன்

கொக்குவில்,
நந்தாவில்.

(6283)

## 1-ம் ஆண்டு நினைவு



| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 31 | 26 |
| — | — |
| 01 | 09 |
| — | — |
| 1976 | 1992 |

## லெப். கலையின்பன்

**(தியாகராஜாக் குருக்கள் இராமையா)**

### சிரார்த்த திதி அழைப்பிதழ்

பூநகரி ஆலங்கேணி மோதலில் 26-09-92 வீரசொர்க்கம் அடைந்த வேங்கை லெப். கலையின்பன் (தியாகராஜாக்குருக்கள் இராமையா) அவர்களுக்கு 15-10-93 வெள்ளிக்கிழமை இன்று தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலில், 1 ம் ஆண்டு நிறைவு தினம், நடைபெறவுள்ளது. அத்தருணம் விடுதலைக்காக பணி செய்யும் போராளிகளையும், அண்ணன்மார் நீலவண்ணன் (தமிழகன்), அன்பழகன், ராசிக் (அறிவழகன்) ஆகியோரையும், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**க. சோமசுந்தரம்,**
(அதிபர் தையிட்டி சிவகுருநாத வித்தியாலயம்)
**சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராயக் குருக்கள்,**
(ஆசிரியர் அ. க. மகாவித்தியாலயம், குடத்தனை)
**சகோதரர்கள்.**

(6284)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-15

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த-

★ **மொசாட** (ஏகாம்பரம் ராசு - உயிலங்குளம் - மன்னார்)

1986ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கார்த்திக்** (குஞ்சுத்தம்பி சுந்தரலிங்கம் ஆரையம்பதி - 03, மட்டு)

**அலிப/கேசவன்** (மூத்ததம்பி உதயகுமார் - ஆரையம்பதி 03 - மட்டு)

**சுவீந்திரன்** (இராமநாதன் சந்திரகுமார் - தாண்டவன் வெளி - மட்டு)

**பேதுரு** (சுவாமிநாதன் எட்வேட் - மட்டு)

**மித்திரன்** (வாமதேவன் அகிலன் - பாரதி வீதி, மட்டு)

**சந்திரன்** (நாகலிங்கம் யோகானந்தன் - 8ம் வட்டாரம், களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதே சம்பவத்தில் பலியான நாட்டுப்பற்றாளரான-

**மாப்பிள்ளை** (வல்வெட்டித்துறை)

மன்னார் - பெரியபண்டிவிரிச்சானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2 ம்லெப். நாயுடு** (மரியாம்பிள்ளை பத்திநாதன் -சின்ன பண்டிவிரிச்சான், மடுக்கோயில்- மன்னார்)

1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **சுப்பிரமணியம் அன்னையா** (கதிரவெளி, வாகரை - மட்டு)

மட்டு நகர்ப்பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**மாத்தையா** (விமலநாதன் மஞ்சந்தொடுவாய் - மட்டு)

யாழ் - கோட்டைப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**முகமது/மருத்தீன்** (சந்திரயோகு மருத்தின் - உயிர்தராசன்குளம் - மன்னார்)

யாழ் - கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**முத்து** ( — மலையகம்)

**ஜேம்ஸ்** [இராசையா பாபு கோணேசன் - நுணாவில் சந்தி, சாவகச்சேரி - யாழ்]

கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**ஜான்** (நாகநாதன் ராஜாரவி - கள்ளிநகர், கைதடி வடக்கு - யாழ்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட கோப்பாய் - இருபாலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

மட்டுநகரில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு குழந்தை, பெண் ஆகிய 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இணுவில் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

**ரதீ** (கந்தசாமி ரதிதரன் - சுதுமலை வடக்கு - யாழ்)

யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**ரவி** (முத்து தவச்செல்வன் -சுதுமலை வடக்கு - யாழ்)

1990ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப்பிரிந்த,

**சியாந்தன்** (கந்தையா சம்பத் - 411, வாரிக்குட்டியூர் - வவுனியா)

1991ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். மைதிலி** (கிருஷ்ணகுமாரி ஏரம்பு -கொக்குத்தொடுவாய் - மணலாறு)

சாவகச்சேரிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சிறீமாஸ்ரர்** கனகரத்தினம் சிறிதரன் - புத்தூர் மேற்கு - யாழ்)

சாவகச்சேரி - சங்கத்தானையில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து தாக்கியதில் பலியான கர்ப்பிணியான இளம் தமிழ்ப்பெண்.

1992ஆம் ஆண்டு மட்டு - அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். இமையவன்/றொபேட்** (குமாரநாயகம் அருமைநாயகம் - வீநாயகபுரம் - அம்பாறை)

**வசந்தன்** (மாணிக்கம் சுரேஸ்குமார் - பாண்டிருப்பு - அம்பாறை)

**லெப் குகன்** (வேலுப்பிள்ளை கமலேஸ்வரன் - வாழைச்சேனை - மட்டு)

**2-ம் லெப். சத்தியநாதன்/ கோவிந்தன்** (பத்திநாதன் தம்பிராசா - மட்டு)

**இராமச்சந்திரன்** (ஞானச்செல்வம் செல்வரத்தினம் - கிரான் - மட்டு)

**இனியவன் / நெல்சன்** (நடராசா சந்திரகுமார் - பெரீய நீலாவணை- மட்டு)

**வீரன்** (வீரபத்திரன் சிவானந்தராசா-சந்திவெளி-மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி, 7600)

யாழ்ப்பாணம்

# இந்திய ஆட்சியை அதிரவைக்கும் அரசியல் பூகம்பங்கள்

**பாலகுமாரன்**

இன்று இந்தியாவின் அரசியல் முறைமை அதன் பொருளாதாரத் துறை இராணுவக் கட்டமைப்பு எல்லாமே பெரும் நெருக்கடி நிலையிலிருப்பதாக கருதப்படுகின்றது. பலம், உறுதி என்கிற நிலைகளிலிருந்து பலமின்மை, உறுதியின்மை, நோக்கிய ஒரு சரிவுப் பாதையில் இவை செல்லத் தொடங்கியமைக்கான சகல அறிகுறிகளும் இன்று தென்படத் தொடங்கிவிட்டன. இந்தியாவின் மத்திய பகுதியில் அண்மையிலேற்பட்ட பாரிய புவி அதிர்ச்சிக்கு முன்னதாக சில காலம் புவி நடுக்கங்கள் ஆங்காங்கே இப்பகுதிகளில் காணப்பட்டதாம். ஆனால் அதனை எவரும் பொருட்படுத்தவில்லை. அது போலவே இன்றைய இந்தியாவின் நிலையும் இருக்கின்றது. இந்தியாவை வலுக்கட்டாயமாக ஒரு நாடாக வைத்திருக்கும் பார்ப்பனிய - முதலாளிய மேலாதிக்க வர்க்கம் இன்று பலவீனமுற்று வருகின்றது. தலை விரித்தாடும் ஊழல் தொட்டு தகுந்த தலைமையின்மைவரை பற்பல இழிநிலைகள் அங்கு தோற்றம் பெறுகின்றன. பிரதானமாக சோவியத்தின் ஆதரவு இல்லாமல் போன பின் அதன் பொருளாதாரத் துறை மட்டுமன்றி இராணுவக் கட்டமைப்பும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றன. பொருளாதார இழப்பை ஈடுசெய்ய தனது பொருளாதார முறைமைகளை முற்றிலும் தலைகீழாக்கி அமெரிக்க மேலாதிக்கத்தோடு கூட்டுச்சேர இந்தியா துடியாய் துடிக்கின்றது. ஆனால் இற்றைவரை இந்திய-அமெரிக்க உறவு சாண ஏற முழம் சறுக்கும் நிலையிலேயே உள்ளது. இதனால் இன்றைய இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும் இலக்குத்தெரியாமல் தடுமாறும் நிலை

முசுலிம் பயங்கரவாதிகளுக்கு பாகித்தான் ஆதரவு எனப் பற்பல ஆதாரங்களைத் திரட்டி அமெரிக்காவுக்கு வழங்கி பாகித்தானை பயங்கரவாத நாடாக்க எடுத்த முயற்சியை அமெரிக்கா புறம் தள்ளிவிட்டது. தனது விண்வெளித்திட்டத்திற்கு மிக அவசியம் என்றும், ஏவு ஊர்திக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் கூறி ருஷ்யாவிலிருந்து 'க்ரையோஜெனிக் ஏவுகணைப் பொறிதொழில் நுட்பத்தை' பெற இந்தியா எடுத்த முயற்சி கடைசி நிமிடத்தில் அமெரிக்காவினால் தடுக்கப்பட்டுவிட்டது. ஏவு ஊர்திக்கு அல்ல ஏவு கணைக்கும் இது பயன்படும் என அமெரிக்கா கண்டனம் தெரிவித்ததும் யெல்ட்சின் தனக்கு நிதியுதவி பெற இந்தியாவை பகடைக்காயாக்கிய விதமும் இந்திய அரசுக்கு பெருத்த அவமானத்தை - அதிர்ச்சியை அளித்துவிட்டது. இன்று பில் பிளிண்டனே, காஷ்மீரில் இந்திய மனித உரிமை மீறல் குறித்துப் பேசியமை இந்தியாவை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டது. எனவே தான் அமெரிக்காவிற்கு இன்னும் பழைய கோபங்கள் தணியாததால் மேலும் அமெரிக்காவை குளிர்விக்க வேண்டி இந்தியா செயற்பட முனைகின்றது.

எனவே தான் பல ஆபிரிக்க நாடுகளே சோமாலியாவுக்கு படைகளை அனுப்ப தயங்கும் நிலையில்- அனுப்பியவர்களே ஏன் அனுப்பினோம் என்று கைகளைப் பிசையும் நிலையில்- அமெரிக்க வேண்டுகோளையேற்று மறு பேச்சு பேசாமல் இந்தியப்படைகள் சோமாலியா செல்லத் தொடங்கிவிட்டன. வெறும் கையோடு இப்படை செல்லவில்லை. போரிடத் தேவையான சகல கனரக ஆயுதங்கள், தாக்குதல் உலங்குவானூர்திகளோடு செல்கிறது சோமாலிய மக்களைப் பாதுகாக்க அல்ல. சோமாலியாவில் அமெரிக்க நலன்களையே பாதுகாக்க செல்கின்றது என்றும் சோமாலிய மக்கள் மீதே போர் தொடுத்துள்ள ஐ.நா. படையில் இணைவதற்கு எதற்கு இந்தியா படைகளை அனுப்ப வேண்டும் என்றும் இந்திய எதிர்க்கட்சிகள் யாவுமே ஒத்த குரலில் எதிர்ப்பை தெரிவிக்கின்றன. மூன்றாம் உலக அரசியல் ஆய்வாளரோ ஒரு புதிய வகைக் குடியேற்ற வாதத்தினை அமெரிக்கா சோமாலியாவில் அறிமுகப்படுத்த முயலும் நிலைக்கு எதற்காக இந்தியா முட்டுக் கொடுக்க வேண்டும் என்று வினா எழுப்புகின்றனர். அதே சமயம் ஐ.நா. அமைதிப்படையில் பணிபுரியும் மேற்குலகப் படைகள் மூன்றாம் உலக இராணுவத் தளபதிகளின் கீழ் அவர்கள் தகுதியும், திறமையும் உள்ள நிலையிலும் கூட-பணிபுரிய எதிர்ப்புக் காட்டும் நிலையில் குறிப்பாக இந்தியாவின் இராணுவ ஜெனரல் சதிஷ் நம்பியார் பொசுனியாவில் அவமானப்பட்டு திரும்பிய பின்னரும் இந்தியப்படைகளை அனுப்புவது அமெரிக்காவிற்கு தனது விசுவாசத்தைக் காட்டுவதற்கே என ''புறொண்ட் லைன்'' இதழ் சாடுகின்றது.

இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் இந்திய இராணுவத்தின் இன்றைய நிலையேயாகும் தமிழீழத்திலிருந்து அவமானப்பட்டு இந்தியாதிரும்பிய காலம் தொட்டு இந்தியப் படைகளின் தரம் குன்றி வருவதாகக் கருதப்படுகின்றது. முன்னர் தமிழீழம் அனுப்பப்பட்ட இந்தியப்படையில் பணிபுரிந்தவரும், தற்போது இந்திய பாதுகாப்பு ஆய்வு நிறுவனத்தில் செயற்படுபவருமான ஜெனரல் யஷ்வந்த் தேவா ''இன்றைய நிலையில் இப்படியானதொரு பணியில் ஈடுபடுத்தக் கூடிய நிலையில் இந்திய இராணுவம் இல்லை என்கிறார். அண்மையில் இந்திய இராணுவத்தின் நிலைமைகளை ஆய்வு செய்த இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் 12 இலட்சம்பேர்களைக்கொண்ட இந்திய இராணுவத்தின் இன்றைய நிலை கவலைக்குரியது என்கிறார். நிதி நெருக்கடியாலும், மறுசீரமைப்பு இன்மையாலும் உட்பிளவுகளாலும் இந்திய இராணுவம் தேக்க நிலையில் இருப்பதாக குறிப்பிடுகின்றார். முன்னொரு போதும் இப்படியானதொரு நிலையில் இந்திய இராணுவம் இருக்கவில்லை எனப்படுகின்றது. முக்கியமாக அடிக்கடி உள்நாட்டு கலவரங்களை அடக்க இராணுவம் அழைக்கப்படுவதால் அதற்கு பயிற்சிக்கும், புத்தாக்க செயன்முறைகட்கும் நேரம் கிடைப்பதில்லையென்றும், சென்ற வருடம் சராசரி ஆறு நாட்களுக்கு ஒரு முறை இந்திய இராணுவம், நாட்டின் ஒரு பகுதியில் அமைதியை நிலைநாட்ட அழைக்கப்பட்டு வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி, அரைவாசி டாங்கிகள் - கவச வாகனங்கள் மூன்றில் இரண்டு பகுதி பீரங்கிகள் முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பெறப்பட்டவை- இன்று இவற்றிற்கான உதிரிப்பாகங்கள் கிடைக்காத நிலையில் இவற்றில் பெரும்பகுதி பயன்படுத்தப்பட முடியாத நிலையிலிருப்பதாக வேறு கூறப்படுகின்றது. பிரதானமான 33 இராணுவப் பிரிவுகளில் ஒன்பதுக்கு மேற்பட்டவை விடுதலைப் போராட்டங்கள் முனைப் படையும் வட கிழக்கு மாநிலங்களான அசாம், திரிபுரா, மணிப்பூர் போன்றவற்றிலும், பஞ்சாபிலும், காஷ்மீரிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. காஷ்மீரின் நிலை நாளுக்கு நாள் மோசமடைவதால் பாகித்தானோடு பதற்றம் அதிகரிக்கின்றது. எனவே இத்தகைய நிலையில் இன்னொரு நாட்டிற்கு படை அனுப்பும் நிலையிலோ இன்னொரு பெரும் போரைச் சந்திக்கும் நிலையிலோ இன்று இந்திய இராணுவம் இல்லை எனப்படுகின்றது. எனவே தான் அண்மையில் சீனா சென்ற பிரதமர் ராவ் 1962ஆம் ஆண்டுப் போரில் தாம் அடைந்த அவமானத்தையும் மறந்து, சீனா பிடித்த 12,000 சதுர மைல் பகுதிகளை போரிட்டு மீட்போம் என்ற முன்னைய சூளுரைப்புகளை கைவிட்டு உடன்பாடு ஒன்றிற்குச் சம்மதித்தார் இதன்படி எல்லைப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவும், எல்லையில் படைக் குறைப்பைச் செய்வதற்கு இருநாடுகளும் சம்மதம் தெரிவித்தும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டு முடிவதற்குள் மிகப் பாரிய பொருளாதார இராணுவ வலிமை வாய்ந்த நாடாக மாறப்போகும் சீனா, தனக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை இந்தியா உணர்ந்த போதும் இருமுனைகளிலும் (சீனா, பாக்) போரை எதிர்நோக்கும் திறன் இன்றில்லை என்றபடியால் தனது முன்னைய பிராந்திய மேலாதிக்கக் கனவுகளை சற்று தள்ளி வைத்து தனது பொருளாதார நிலையை உறுதிப்படுத்த வேண்டிய நிலை இன்று இந்தியாவிற்கு ஏற்பட்டுவிட்டது.

இதேவேளை இந்திய அரசியல் நிச்சயமின்மை என்கிற நச்சு வட்டத்தில் இன்று வேறு சிக்கிவிட்டது. மத்தியில் மட்டுமன்றி மாநிலங்களின் மட்டத்திலும் காங்கிரசுக் கட்சியின் நிலை மிகப் பரிதாபகரமாக இன்றுள்ளது. உட்கட்சிப் பூசல்கள் என்றுமில்லாத அளவுக்கு தலை விரித்தாடுகின்றன. இரு வருட ஆட்சிக் காலத்தில் 4க்குமேற்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்தித்த நரசிம்மராவ் அரசு, அண்மையில் ஏறத்தாழ கவிழும் நிலையை அடைந்தது. பங்குச் சந்தையில் பத்தாயிரம் கோடி ஊழல் போபர்ஸ் பீரங்கிக் கொள்வனவில் ராஜீவ் காந்தி கோடிக் கணக்கில் பணம் பெற்றது முற்றிலுமாக உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் ஊழல் புரிவதில் உலக சாதனையை இன்று டெல்லியின் ஆளும் வருக்கம் புரிந்துள்ளது. அயோத்தியாவில் மசூதி இடிக்கப்பட்ட பின்னர் வட இந்திய இந்தி மாநிலங்களில் பாரதீய சனதாவின் திடீர் வளர்ச்சி வழமையாக காங்கிரசுக்கு ஆதரவாக வாக்குப் போடும் முசுலிம்களை தமக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் கொடிய வன்முறைகளை காங்கிரசு தடுக்காத நிலையில் தாமே வன்முறைத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் புதிய அபாய நிலை என இருமுனை அபாயங்களை காங்கிரசு எதிர் நோக்குகின்றது. பம்பாய் குண்டு வெடிப்பிலிருந்து சென்னைக் குண்டு வெடிப்பு வரை இப் புதிய பரிமாணம் புலப்படத் தொடங்கி விட்டது. இவற்றிற்கு எல்லாம் மேலாக கூடிநின்றே குழி பறிக்கும் பிரதமர் ராவின் போட்டியாளரான அர்ஜுன் சிங் தனது நிலையை படிப்படியாக உறுதிப்படுத்தி தென்னக மாநிலங்களிலும் செல்வாக்கினை நிலைநிறுத்தி ராவை கவிழ்க்க தக்க தருணம் பார்த்து நிற்பது இன்று பகிரங்க இரகசியம். நாள் தோறும் இந்த இருவர்களினதும் 'பனிப்போர்' பற்றிய செய்திகள் வந்த வண்ணமேயுள்ளன.

இத்தகைய தொரு இக்கட்டான நிலையிலேயே இவ்வருட முடிவில் நடக்க இருக்கும் நான்கு மாநிலங்கட்கான தேர்தல் மிக முக்கியத்துவம் பெறப்போகின்றது. 14 1 2 கோடி மக்கள் உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், இமாசலப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களிலும் இந்திய அரசின் எதிர்காலத்தை தீர்மானித்து முடிவெடுக்கப் போகிறார்கள். காங்கிரசு மண் கவ்வுவதும், ராவின்தலைமைபறிபோவதும் நிச்சயம் என்றே புதுடில்லியில் செய்திகள் அடிபடுகின்றன. ஏனென்றால் ஏற்கனவே பாரதீய சனதாவால் தோல்வியை எதிர் நோக்கிய நிலையில். இடியாக இன்னொரு எதிர்ப்பையும் சந்திக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. முன்னர் சனதாக் கட்சியில் ஒன்றாக இருந்து பின் பிரிந்து போன வி. பி சிங், சந்திரசேகர், அஜித் சிங் போன்றோர் மீண்டும் சனதா தள்ளில் ஒன்றிணைய எடுத்த முடிவு இந்திய அரசியலில் பெரு மாற்றத்தை கொண்டு வரக் கூடும் எனக் கருதப்படுகின்றது. இப்போது போட்டி பாரதீய சனதா கட்சிக்கும், இடதுசாரி தேசிய முன்னணிக்குமாக மாறும் நிலை. இந் நிலையில் காங்கிரசின் நிலை மிகப் பரிதாபகரமாக இருக்கின்றது என்கிறது 'இந்தியா டுடே' இதழ். பதவியொன்றையே நோக்கமாகக் கொண்டு அமையும் இக் கூட்டுக்கள் பார்ப்பனீய ஆளும் வருக்கத்தின் அலங்கோலமான பதவிப் போட்டிகளை அம்பலமாக்குகின்றன. எது எப்படியிருந்த போதிலும் வி. பி சிங்தலைமையிலான கூட்டிற்கு ஆதரவு வலுப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தவிதமாக முழு இந்திய அரசியலிலும் சனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் நிலையில் மறுபக்கத்தில்இதன் விளைவுகள் பாரதூரமாகின்றன. வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கி பட்டினிச்சாவுகளை காணும் பீகார், ஒரிசா மாநிலங்களில் மாவோயிசவாதத்தை வரித்துக் கொண்ட அமைப்புக்கள் வேகமாக வளர்கின்றன. ஏற்கனவே ஆந்திராவில் ''மக்கள் போர்ப் பாதை'' நக்சல்பாரி அமைப்புகள் வலுவாக வளர்ந்து வருவது தெரிந்த விடயம். அதே போன்றே இப்போது பீகார் மாநிலத்தின் எம்.சி.சி. எனப்படும் மாவோ பொதுவுடமைக் கட்சி வறிய விவசாயிகளை அணியாக்கி போராடி வருகின்றது. பீகாரின் மத்தியபகுதியில் மாற்று அரசு ஒன்றையே இவர்கள் நடத்துவதாக கூறப்படுகின்றது. 1960களில் மேற்கு வங்க நக்சல்பாரியில் தோன்றிய சாருமஜும்தாரின் இயக்க முன் மாதிரியை பின்பற்றி நிலவுடமையாளர்களைக் கொன்று அவர்களின் நிலங்களை ஏழைகட்கு பங்கிட்டு (இதுவரை இவ்வாறாக 6000 ஹெக்டயர் நிலம் பங்கிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது) மாவோவின் பாணியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை உருவாக்கும் இத்தகைய அமைப்புக்கள் இந்திய அரசியலின் இன்னுமொரு போர்முனையை ஆரம்பித்துள்ளன. மக்கள் பாதை. எம்.சி.சி போன்ற அமைப்புக்களிடையே ஏற்படும் நெருக்கங்களின் விளைவுகள் சிலகாலத்தின் பின்னரே தெரிய வரும்.

இவ்வாறு இந்திய அரசியல் தட்டுத் தடுமாற, தமிழ்நாட்டு அரசியலும் தன் பங்கிற்கு அலங்கோலத்தை அள்ளித் தெளிக்கின்றது. சில காலத்தின் முன் வெற்றிக்கனியை எட்டிப் பறிக்கும் நிலையிலிருந்த தி.மு.க. இன்று சிதைவடைந்து சிதறப் போவதற்கு முழுக் காரணம், முன்னர் தி.மு.கவே தனது குடும்பம் எனக் கூறிய மு.க., இப்போது தனது குடும்பமே (அதுவும் மூத்த மனைவி தயாளு அம்மையாரின் குடும்பம்) தி.மு க. என செயற்பட்டதன் விளைவே என்பது அப்பட்டமான உண்மை. ஆனால் சிலஆய்வாளரோ, இது தி.மு க.வுக்கு மட்டுமல்ல முழு இந்திய அரசியலுக்கும் பொருந்தும் என்கிறார்கள்.

## சீட்டிழுப்பு முடிவுகள்

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்க வளர்ச்சி நிதிக்காக 4 - 9 - 93 இல் நடாத்தப்பட்ட கலை விழா நிகழ்ச்சி சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

**1-ம் பரிசு இலக்கம் 3938**

**2-ம் பரிசு இலக்கம் 1221**

**3-ம் பரிசு இலக்கம் 0646**

பரிசில்களை 10 - 11 - 1993-ம் திகதிக்கு முன்னர் ஐக்கியநலன்புரிச் சங்க பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.

**நா. கனகசபை (கட்சன்)**
பொதுச்செயலர்.

6286

# வெள்ளைப் பிரம்பும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமும்

**சர்வதேச வெள்ளைப் பிரம்புப் பாதுகாப்புத் தினம் இன்றாகும். விழிப்புலனற்றோரின்பால் எமது சிந்தனையைச் செலுத்தவென பிரகடனம் செய்யப்பட்ட இத் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்று சர்வதேச வெள்ளைப் பிரப்பு பாதுகாப்புத் தினமாகும். இந்த வேளையில் இந்த வெள்ளைப் பிரம்பு என்றால் என்ன? விழா எடுக்குமளவிற்கு அதன் முக்கியத்துவந்தான் எனன? என்னும் வினாக்கள் நமது மனங்களில் எழுவது இயற்கையே. கண் பார்வையற்றவர்கள் வீதிகளில் செல்லும் போது, ஒரு வெள்ளை நிறப் பிரம்பைத் தமது கரங்களிலே ஏந்திச் செல்வதை நம்மில் பலர் அவதானித்திருக்கக்கூடும். இதுவே வெள்ளைப் பிரம்பாகும். இது பார்வையற்றோரின் அடையாளச் சின்னமாக சர்வதேச ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, இவ் வெள்ளைப் பிரம்பு ஒரு பார்வையற்றவரை, அல்லது பார்வைக் குறைபாடுடையவரை ஏனையவர்களுக்கு இனங்காட்டுகின்ற ஒரு கருவியாக விளங்குகின்றது இதன் மூலம், வீதியால் செல்லும் விழிப்புலனற்ற ஒருவருக்கு, சக பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் இடையூறின்றி நடந்து கொள்ளவும், தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் அவருக்கு உதவி புரியவும் வழி ஏற்படுகின்றது.

இவ்வெள்ளைப்பிரம்புமுதல் முதலாக 1931ஆம் ஆண்டு அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியர் என்னும் இடத்தில் கண் பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல நாடுகள் இதனை ஏற்றுக் கொள்ள முன்வந்தன இன்று நமது நாடு உட்பட, முழு உலகமுமே இவ் வெள்ளைப் பிரம்பை ஏற்று அங்கீகரித்துள்ளது மட்டுமன்றி, இதனைத் தாங்கிச் செல்பவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் உரிமைகளையும்வழங்கியுள்ளன உதாரணமாக, இந்த வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு வீதியிலே முதலில் நடந்து செல்லும் உரிமை உண்டு வீதியை முதலில் கடக்கும் உரிமை உண்டு. எந்த ஒரு பொதுப் போக்குவரத்து வாகனத்தையும் எவ்விடத்திலேனும் மறித்து அதில் ஏறிக் கொள்ளவும் உரிமை உண்டு

### வெள்ளைப் பிரம்பு தின விழா

1969ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற அகில உலகப் பார்வையற்றோர் சம்மேளனத்தின் மகாநாடொன்றிலே ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப் பிரம்புப் பாதுகாப்புத் தினமாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலே 'யாழ் விழிப்புல

**ஆ. இரவீந்திரன் (பீ. ஏ)**

னற்றோர் சங்கம், கடந்த 1978ஆம் ஆண்டிலிருந்து இத் தினத்தை யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் அவ்வப் பகுதியைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களின் உதவியோடு வெகுசிறப்பாககொண்டாடி வந்துள்ளது. முக்கியமாக இவ் விழா இரு நோக்

(8 ஆம் பக்கம் பார்க்க)




# விளக்கு- ஒரு மதிப்புரை சார்ந்த பார்வை

| | |
|---|---|
| ஆசிரியர் | : சி. சரவணபவன் |
| உதவி ஆசிரியர் | : க. வை, தனேஸ்வரன் |
| வெளியீடு | : தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம் |
| விலை | : ரூ. 15\|- |

தமிழ் ஈழத்தில் பத்திரிகைத் துறைசார் வளர்ச்சியில் சிறு இதழ்களின் பங்கு மிக முக்கியமானது சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'இலங்கை விகடன்'' 'தமிழ்மகள்' சிறு இதழ்கள் - பெயரளவில்தான் - யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன. 1945இல் வெளியான தி. ச. வரதராசனின் (வரதர்) 'மறுமலர்ச்சி' இன்றைய சிறு பத்திரிகைகளுக்கு ஒரு முன்னோடியாகும். எழுத்தை வியாபாரத் தன்மையோடு இணைக்காமல் அக்காலத்தில் மறுமலர்ச்சி வெளிவந்தது தனிச்சிறப்பு. இந்தத் தொடர் சூழலில் கடந்த ஐம்பது வருட காலப் பகுதியில் 'கலைச்செல்வி' மற்றும் பல சிறு இதழ்கள் அவ்வப்போது வெளிவரத் தொடங்கின ஆக்க இலக்கியமே இவற்றின் அடித்தளமாக விளங்கியது. 'மல்லிகை' தவிர்ந்த ஏனைய சிறு இதழ்கள் பொருளாதார முடைகாரணமாக அற்பாயுசில் வெளியீட்டை நிறுத்திக் கொண்டன. இவை நின்று போனதற்கு வேறு சில காரணங்களும் இருக்கலாம்.

— அரை நூற்றாண்டு பரிணாமவளர்ச்சியில்பலசிறு இதழ்கள் அண்மைக் காலங்களில் வெளிவருகின்றன. இந்த பின்னணியில் மாற்றான ஒரு முயற்சியாக (06-10-1993) 'விளக்கு' மாத இதழ் வெளிவந்துள்ளது. கடதாசிக்கு அருந்தல் நிலவும்இந்த வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் விளக்கு அச்சுவாகனமேறி வெளிவருவது, எந்த விஷயத்திலும் ஆர்வத்தோடு சிந்திப்பவர்களுக்கு ஒரு வழி தென்படும் என்பதைக் காட்டுகிறது.

— அட்டைப்படம் இதழின் நோக்கத்தை விளக்கமாகப் புரிந்து கொள்ள உதவுகிறது. ''தனிமனித வளர்ச்சி, சமுதாய எழுச்சி, பொருளாதார உயர்ச்சி, ஆன்மீக, பண்பாட்டு மலர்ச்சி முதலியவை கல்வியின் சீரிய இலட்சியங்கள்'' என்று தலையங்கம் பல பிரிவுகளையும் தொட்டு விரிகிறது. இக்கூற்றில் பல பரிமாணங்கள் தெரிகின்றன.

— ஈழத்தின் வாசகர்களிடையே அதிகம் அறிமுகப்பட்டவராகிய கலைச்செல்வி ஆசிரியர் சி. சரவணபவனை ஆசிரியராகக் கொண்டு விளக்கு வெளிவருவது நம்பிக்கையைத் தருகிறது. ''மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை'' என்ற விவேகானந்தரின் சிந்தனையையும் ''... புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'' என்ற மகாகவி பாரதியின் வாக்கையும் தலையங்கத்தில் மேற்கோள் காட்டி எழுதுவது ஆசிரியரின் ஆத்மார்த்தத்தை கோடிட்டுக் காட்டுகிறது.

**மதன்**

— இனி, தலையங்கத்தில் இறுதி 4ஆம் பக்கத்தில் அரைவாசிக்குமேல்எதுவும்இல்லாமல் வெறும் கடதாசியாக விடப்பட்டிருப்பது வியப்பாக உள்ளது. மற்றும்படி, கட்டுரைகளின் முடிவில் இடத்தை நிரப்பும் (Filler) வகையில் கலைமகளில் எழுதித் தமிழ் நாட்டின் வியாபாரத்தன்மை மூலம் நம் நாட்டில் அறிமுகமாகிய கி. வா. ஜாவின் மற்றும் புலவர் கீரனின் துணுக்குகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. நம்மூரில் ஆரோக்கியமான கவிஞர்களும், எழுத்தாளர்களும் நிறையவே இருக்கிறார்கள். இதிலுள்ள கட்டுரையான சாதனைக்கு ஒரு பாதை ஏலவே வெளியானது. இந்தியரான டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தியின் இக்கட்டுரையை நன்றியுடன் விளக்கு மறுபிரசுரம் செய்துள்ளது.

— விளக்கில் உள்ள மிகுதிக் கட்டுரைகளும் கல்விசார்ந்த முயற்சி என்று கூறுவது தவறாகாது. கட்டுரைகளைஅ. பஞ்சலிங்கம், ஆர். எஸ். நடராசா, சபா.ஜெயராசா, க. சொக்கலிங்கம், கோ. சி. வேலாயுதம், கா. மாணிக்க வாசகர் ஆகியோர் எழுதியுள்ளார்கள். கடைசியாக ஆ. இராமசாமி அவர்களுடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது.

> **விளக்கு**
> **ஆசிரியர் தலையங்கத்திலிருந்து -**
>
> *கல்வி என்பது மனிதனுள்ளே அரும்பு நிலையிலுள்ள நல்லாற்றலைத் தூண்டி வளர்த்து வளப்படுத்தும் செயற்பாடாகும். இச் செயற்பாட்டின் பிரதான செயலாளன் — ஆசிரியன்.*
>
> *மனிதனைப் புனிதனாக்கிப் பூரணமானவனாக ஆக்கும் மகத்தான பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள ஆசிரியனுக்குத் துணையாக வருகின்றது விளக்கு*

— பாடசாலை அதிபர்கள் - ஒரு சிந்தனை என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் எழுதியுள்ள கட்டுரை அதிபர் பதவி மற்றும் அதிபர் தெரிவில் உள்ள குறைபாடுகள் பற்றியது. உயர்ந்த தரத்தில் நின்று விமர்சன நோக்கில் எழுதியுள்ளார்.

— பஞ்சலிங்கம் சற்றுஅழுத்தமாகவே சில விஷயங்களைச் சொல்கிறார். ''நல்ல கல்வி அறிவு,நல்ல கல்வித்தகைமைகள்இருந்தால் மட்டும் ஒருவர் சிறந்த அதிபராகச் செயற்படலாமென்ற தப்பான மனப்பாங்கு இந்த மாற்றமடையும் உலகில் இன்னும் பலரிடம் நிலவுகின்றது. அதிபர் தெரிவில் இப்போது பின்பற்றப்படும் வழிமுறை இதனையே பிரதிபலிக்கின்றது. இதனால் சிரேஷ்ட ஆசிரியர்கள் மத்தியில் மனவிரக்தி ஏற்பட்டுள்ளமை கண்கூடு'' என்று அதிபர் தெரிவு முறை கடுமையான சாடலுக்கு உள்ளாகியுள்ளது. இவரது கட்டுரையில் ஒரு நக்கீரத்தனம் இழையோடுகிறது.

— மாற்றம்வேண்டும் என்ற கட்டுரை ஒப்பீட்டு நோக்கில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் ஆர். எஸ். நடராசா இக்கட்டுரையை எழுதியுள்ளார். தன்சானியாவின் கல்வி முயற்சிகள் வளர்முக நாடுகளுக்கு முன்னோடியாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். அத்துடன் காலத்துக்கேற்ற கல்விமாற்றம் அவசியம்என்பது வெகுசனப்போராட்டமாக வேண்டியது இன்று அவசியமாகி விட்டது என்று அழுத்தமாகச் சொல்கிறார்.

— அடுத்த கட்டுரை யாழ். பல்கலைக்கழக கல்வியியல் புல சிரேஷ்ட விரிவுரையாளர் சபா. ஜெயராசாவினுடையது கல்வி முகாமைத்துவச் செல்நெறிகள்- நல்ல கட்டுரைப் பொருள். ஆனால் கையாளப்பட்டிருக்கும் நடையில் ஒரு வித இறுக்கம்.

— இளைப்பாறிய அதிபரும் எழுத்தாளருமாகிய க. சொக்கலிங்கத்தின்(சொக்கன்) கட்டுரை- நுண்ணறிவு ஈவும் ஆக்கத்திறன் ஈவும் நுண்ணறிவு ஈவு (ஐ. கியூ) குறைந்தவர்களிடமும் படைப்பாற்றல் சாத்தியம் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. அற்புதமான உண்மையை பட்டறிவு அடிப்படையிலும், அனுபவ ரீதியாகவும் பல உதாரணங்களோடு சுவைபட எழுதியுள்ளார். கட்டுரையாளரின் நடைப்பிரயோகம் கட்டுரைக்குப் புதிய அழகைச் சேர்க்கிறது. கல்வி உளவியல் களமும் கருத்துமில்லா ''விவேகம் இல்லாதவர்கள்'' ''மொக்கர்'' ஆகிய சொற்கள் கட்டுரை பற்றிய குறிப்புகளில் இடம்பெற்றிருப்பதுடன் உடன்பட முடியவில்லை.

— இந்த இதழில் யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே சி. வேலாயுதம் சட்டம் ஒரு இருட்டறை என்றகட்டுரையில்பாடசாலை அனுமதியில் மிதமான போக்கும் நெகிழ்ச்சியான அணுகுமுறையும் வேண்டும் என்று ஒரு எதார்த்தத்தைக் கையாண்டிருக்கிறார். தான் அதிபர் வேலை பார்த்த காலத்தில், தனது தற்துணிவு அதிகாரத்தைப் பாவித்து இருபது வயது மாணவிக்கு க. பொ. த.ப,(சா.த) வகுப்பில் அனுமதி கொடுத்ததன் பேரில் அவள் சிறப்புப்பட்டதாரியாக வந்த சம்பவத்தைத் துல்லியமாக விளக்குகிறார். இந்த விஷயத்தில், கல்வி இறுதியில் எந்த மக்களின் நலன்களுக்குப் போய்ச் சேர்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இப்போது பொருளாதார, சமூக ரீதியான மற்றும் இன ரீதியான அடக்கு முறைகளுக்கும் உள்ளானஅனைத்துமாணவர்களுக்கும்இதுபொருந்தும் இக்கட்டுரையில் ''அதிபர்,தானே சட்டத்தை மீறலாமா?'' என்ற கேள்விக்கு இடமில்லை. வழக்கு உள்ளதே அல்லாமல் அப்படி ஒருசட்டமும் இல்லை. இருந்தால்தானே மீறுவதற்கு? அனுதாபப்பட முடிகிறது.

— யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தனது ஏணிப்படிகள் என்ற கட்டுரையில், தன்னை உருவாக்கிய ஆசிரியரை நினைத்துப் பார்க்கிறார். அந்தரங்க சுத்தியாக தன் பாடசாலை அனுபவங்களையும் விளக்கியுள்ளார். மாணிக்கவாசகரின் கருத்தை இன்னும் கூர்மையாக்கினால்

[7ஆம் பக்கம் பார்க்க]

மாநகர ... யாழ்ப்பாணம்

## சிறுகதை

# ஞான உபதேசம்

**- ரகுராம்**

வெளிச்சம் வற்றிப் போய் வெகுநேரமாயிருந்தது. சில்வண்டுகளின் ஓலம் காதைக் கிழித்தது. நாய்கள் குரைக்கின்ற சத்தம் தூரக் கேட்டுக் கொண்டிருக்கிறது. படலையடியில் ஏதோ அரவம். காதைக் கூர்மையாக்கிக் கொண்டேன். ''அண்ணை, சிவம் அண்ணை'' மெல்லிய குரல் மிதந்து வந்தது. நெஞ்சு 'திடுக்' என்றது. நான் உதவி செய்கிறது இவங்களுக்குத் தெரிஞ்சு போச்சுப் போல கிடக்கு. மெதுவாக வீட்டிற்குள் நழுவினேன். ''இஞ்சை, றோட்டிலை ஆரோ என்னைக் கூப்பிடுகினம், இழவெடுத்தவங்கள் ஆமியோட வந்திட்டாங்கள் போல கிடக்கு, நான் பின்பக்கமா தோட்டப் பக்கம் போறன், நீ போய் நான் இல்லை எண்டு சொல்லு'' என்று மனைவியிடம் சொன்னேன். மனைவி பயப்பிராந்தி அடைந்தாள். பிள்ளைகளின் முகங்களில் இனம்புரியாத கிலேசம். மனைவி முன்னுக்குப் போனாள். ''யார் தம்பி? அண்ணை வீட்டில இல்லே''. பதிலை எதிர்பார்த்து மௌனமாகிறாள். ''கமலம் அக்கா, அது நாங்கள்'' என்ற குரல் வேலியைக் கடக்கும் என் செவிகளில் விழுகிறது. 'அடநம்மாக்கள்' என்று புரியாத சந்தோசத்தோடு முணுமுணுத்துக்கொண்டு சென்ற வேகத்தில் திரும்பினேன். ''உள்ளவாங்கோ, இஞ்ச குமார் அப்பாவை ஓடிப் போய் கூட்டிவா, அண்ணைமார் வந்திருக்கினமாம் என்று சொல்லு, போ'' என்று மனைவி மூத்தவனை அனுப்பும் சத்தம் கேட்கிறது. ''நான் வந்திட்டன், பெடியண்ட குரல் வேலியக் கடக்கைக்குள்ள கேட்டுது! கொஞ்ச நேரம் பயந்த பயம்'' என்றபடி முன் விறாந்தைக்கு வந்தேன். ''அண்ணை வந்திட்டியளே? ஆமி அங்கால போனாப் பிறகு வரலாமெண்டு வந்தனாங்கள்'' என்றான் தவம். தவத்தோடு இன்னும் இருவரும் வந்திருந்தார்கள். ''யார் தம்பி புதுசா கிடக்கு?'' என்றேன் கேள்விக் குறியோடு. ''இவை திருக்கோணமலையிலிருந்து வந்தவை அண்ணை, வரையுக்குள்ள மூதூரில ஆமியைக் கண்டு பிரிஞ்சு இஞ்சால இவரெண்டு பேரும் வந்திட்டினம், மற்றவையும் வருவினமாம்'' என்றான் தவம்.

''தவம் நீங்கள் இஞ்சால நடமாடுறதை யாரோ சொல்லிப் போட்டாங்கள் போல கிடக்கு. அஞ்சாறு நாளா ஏக 'ரவுண்ட் அப்'; பார்த்து வந்து போங்கோ'' என்றேன்.

''அண்ணை நாளையோட நான் மட்டக்களப்பிலே. நாளைக்கு காலம்பிற போறன். இனி இவை இரண்டு பேரும்தான் இஞ்சால பொறுப்பு, உங்களுக்கு இவையத் தெரியப்படுத்தத்தான் கூட்டிக்கொண்டு வந்தனான் இவர் கஜன், ஊர் முருங்கன். இவர் வசந்தன் சுழிபுரம்'' என்று அறிமுகப் படுத்தினான் தவம்.

தவம் நாளையோடு மட்டக்களப்பு போவதை எண்ணி வேதனை அடைந்தேன். நான் சேனையூருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றம் வாங்கிவந்த ஓரிரு நாட்களில் அறிமுகமானவன் தவம். தன்னுடைய செயல்களால் ஊர் மக்களை தன்வசப் படுத்தியவன். எண்பத்தி மூன்று ஜூலையில் தமிழர் பட்ட இன்னல் கண்டு வேதனைப் பட்டு உரிமை காக்க புலிகளுடன் இணைந்தவன். களம் பல கண்டவன். எனது கூடப் பிறந்த சகோதரன் போல் பழகியவன். மனைவியைத் திரும்பிப் பார்த்தேன். கண்கள் குளமாக நின்றது. பிள்ளைகள்? அவர்கள் வேதனை சொல்லுந் தரமன்று.

பேச்சற்று நின்ற எங்கள் நிலையை தவத்தின் குரல் கலைத்தது. ''அண்ணை, எனக்குக் காட்டின அன்பையும் ஆதரவையும் இவைக்கும் காட்டுங்கோ. கஜன், வசந்தன் அண்ணையை நீங்க எந்த உதவிக்கும் கேட்கலாம். சரியே'' என்றான்.

''தம்பியவை, சாப்பிட்டுட்டு போகலாந்தானே'' என்றாள் மனைவி ''இல்லையக்கா, ஆமி திரும்ப இதாலே வந்தாலும் வருவான்கள், நாங்கள் அதுக்கிடையில போயிரோணும்' என்றவன், பிள்ளைகளைப் பார்த்து, 'டேய் தம்பியள் தவம் அண்ணையை மறக்க மாட்டியள்தானே?' என்ற அவன் குரல் கமறியது. மனைவியால் தாங்க முடியவில்லை. விசும்பினாள்.

''சரி அண்ணை வாறன், அக்கா வாறன்'' என்றபடி படலையை நோக்கிப் போனான்.

அவர்கள் போனதும், விறாந்தையில் இருந்த சாய்மனைக் கதிரையில் இருந்த நான் அந்த இனிய உள்ளத்தை எப்படி மறப்பது என்ற வேதனையில் அதிலேயே தூங்கிப்போனேன்.

காலம் தன் கடமையைச் செய்தது. இந்த உலகில் தன் பணியை ஓயாது செய்வது அதுதானே. ஊரில் அன்னியனின் அடிச்சுவடுகள் தொடர்ந்தது. துரோகக் கும்பல்களும் சுற்றித் திரிந்தன. வன்னியன் பிறந்த இம்மண்ணில்தானே காக்கையனும் தோன்றினான். ஆனால் உணர்வில் தான் எவ்வளவு வேறுபாடு. நவீன காக்கையன் கூட்டம் அன்னியன் முந்தானையில் முகம் துடைத்தது.

என் மூத்தவனும் பதினாறைக் கடந்தவன். பள்ளி மாணவன். என்வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டேன்.

அன்றொரு நாள், வேலை முடிந்து ஓய்வாக விறந்தையில் இருந்தோம். நய வஞ்சகர் வருவதை நாய்கள் கட்டியம் கூறின. ''குமார் நீ உள்ள போ'' என்றேன். படலையடியில் வாகனம் நின்றது. எம கிங்கரர்கள் குதித்தார்கள். ''வீட்டில யாரடா? வெளியில வா'' என்ற வார்த்தைகள் வந்திருப்பவர்களின் தகுதியைத் தரம் கூறின. 'தம்பி வீட்டில பெடியள் தரவழி இல்லை'' என்றேன். ''டேய் என்னடா பொய் சொல்லுறாய்? நீ படிச்சவனாடா? புலிக்கு சாப்பாடு குடுத்தனீ இல்லையா? தொடர்ந்து தூஷணம் பொழிந்தவன், ''உண்ட பெடியனை வெளியால கூப்பிடு, இல்லாட்டி தோலுரிப்பம்'' என்றான்.

அவன் சொல்லி முடிந்தது தான் தாமதம் தூரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டன. கண நேரமும் தாமதிக்காமல் பாய்ந்து வாகனத்தில் ஏறினான். வாகனம் அன்னியனின் முகாமை நோக்கி பறந்தது.

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''வாய்ச் சவடால்காரரின் துணிவு வெடி கேட்கும் வரைதான்'' என்ற மனைவியும் பிள்ளைகளும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சிறிது நேர மௌனத்தின் பின், ''நாங்கள் இனிமேலும் குமாரை வீட்டில வச்சிருக்கிறது நல்லதில்லை, நீ நாளைக்கு அவனையும், பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் போ'' என்றேன்.

அடுத்த நாள், பிள்ளைகளையும் மனைவியையும் யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு வந்த எனக்கு ''தவம் வீர மரணம்'' அடைந்து விட்டான் என்ற செய்தி கிடைத்தது. என்னால் என்னையே உணர முடியவில்லை நெஞ்சின் மேல் பாறாங்கல் ஒன்றை வைத்தது போன்ற உணர்வு. கதிரையில் சரிந்தேன். என் தாய் இறந்த போது கூட கலங்கியறியாத என் கண்கள் கலங்கின. நாட்டைக் காக்க வீட்டைத் துறந்த வீரமகன் மரணித்து விட்டான். ஊர் காக்க உறவு துறந்த, உத்தமனின் நினைவுகள் என்னை வாட்டின. அவனது ஆத்மா சாந்தியடைய என் மனம் பிரார்த்தித்தது.

தொடர்ந்த நாட்களில் என் கடமைகளைச் செய்தாலும், என்னுள் ஒரு வெறுமை படர்ந்திருந்ததை உணர முடிந்தது. காணும் இடங்களில் எல்லாம் தவம் தெரிந்தான். 'மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தவத்தின் வீரமரணத்தை கடித மூலம் தெரியப்படுத்தினேன். அவர்கள் கடிதம் கண்டதும் அடையப் போகும் துயரம் எப்பாற்பட்டது என்பதையும் உணர்ந்தேன்.

ஐந்தாறு நாட்களின் பின் கஜனையும் வசந்தனையும் சந்தித்தேன். அவர்களை அவனது பிரிவுவெகுவாக பாதித்திருந்தது. ஆனால் வெளிக்காட்டவில்லை. எத்துணை துயரடைந்தாலும்கலங்கா வீரப்புலிகளல்லவா அவர்கள்!

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள்பிற்பகலில்மனைவியும் கடைசிஇருபிள்ளைகளும் வீடு வந்தார்கள் 'என்ன மூத்தவனை காணயில்லை, வர்ற வழியில பயமெண்டு விட்டுட்டு வந்திட்டாளாக்கும், என் எண்ண ஓட்டம் ஓடியது. மனைவியின் முகத்தைப் பார்த்தேன். ஏதோ சொல்ல வருபவள் போல அவள் முகம் இருந்தது. ''என்ன ஏதேனும் பிரச்சனையோ?'' என்றேன். ''குமார் அங்கே இயக்கத்தில சேர்ந்திட்டான்'' என்றாள். தந்தை என்ற முறையில் வேதனை மனதைப் பிசைந்தது. அதனை வெளிப்படுத்தாமல் ''அவனுக்கு தன்ட உணர்வுகளை வெளிப்படுத்த உரிமை இருக்கு. அவனைப் பற்றி நீ கவலைப்படிறியே?'' என்றேன். அவளால் ஏதும் பேசமுடியவில்லை. கண்கள் குளமாக நின்றன. ''அவனைப் பெற்றதில நீ பெருமைப்படு, வீணாக் கவலைப்படாதே'' என்றேன். என் மனம், குமாரைப் பற்றிப் பெருமைப்பட்டது. ஆயினும் என் மனதின் ஒருமூலையில் வேதனை இருந்தது. குமாரைக் கண்டு கதைக்க என் உள்ளம் ஏங்கியது. என் எண்ணத்தை மனைவியிடம் கூறினேன். அவளும் சம்மதித்தாள்.

குமார் இருக்கும் இடத்தை மனைவியிடம் அறிந்து கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டேன். பஸ்சில் எனது சிந்தனைகள் பலவாறு ஓடின. எல்லாவற்றிலும் குமாரின் செயல் சரி என்றே முடிவு கண்டேன். மனம் சாந்தி பெற்றது. நேரம் ஓடிக் கொண்டிருந்தது. வழியில் பல இடங்களில் தடை முகாம்களில் ஏறி இறங்கினேன். வவுனியாவில் வைத்து இரு இளைஞர்கள் இறக்கப்பட்டனர். அவர்களின் பெற்றோர் கதறிய கதறல், கல்லைக் கூட கரையச் செய்து விடும் போல் இருந்தது. அவர்களுக்கு கிடைத்த வசவுகள் நாவைக் கூட நாணச் செய்யும். பெற்றோர்கள் பலவந்தமாக பஸ்சில் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள். நாள் முழுதும் ஓடிய பஸ் யாழ்ப்பாணத்தை அடைந்தது.

நாளைக்கு குமாரைக் காண்பது என்ற முடிவுடன் நகருக்குள் இருக்கும் அக்காவின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன். வழியெல்லாம் களிமண் கோட்டைகள் என்னை வரவேற்றன. புரியாத மொழிகள் ஓங்கி ஒலித்தன. காடு, மேடு எல்லாம் அன்னியனின் கொட்டகைகள். நாயோடு கூடியிருக்கும் தெள்ளுப் போல, அருகில் எங்கள் ஊர் எட்டப்பர்கள். பராக்குப் பார்த்தபடி நடந்த என் முகத்தில் மழைத்துளி ஒன்று பட்டது. மேலே வானம் பொழிய ஆயத்தமாயிருந்ததை அது பறைசாற்றியது. பார்வையை ஒடுக்கிக் கொண்டு எட்டி நடக்கத் தொடங்கினேன். தூரத்தே வீடு தெரிந்தது.

மறுநாள் காலையில், நேரத்தோடு எழுந்து, மனைவி கூறியிருந்த இடத்தை உறவுப் பெடியன் ஒருவனின் உதவியோடு அடைந்தேன். நகரிலிருந்து தொலைவில் இருந்தது அம்மறைவிடம். வழியில் பல இடங்களில், மடித்துக் கட்டிய சாரமும் கையில் வெடிகுண்டுமாக பல இளம் ரத்தங்கள். எல்லோரும் எனக்கு, மகன் குமாராகவே தெரிந்தனர். உள்ளே அடர்ந்த பனங் கூடலுக்குள் பயிற்சித் தளங்கள். எனக்கு ஏற்கனவே அறிமுகமான இளைஞன் ஒருவன், என்னைக் கண்டதும், ''ஆ, சிவா அண்ணை, வாங்கோ'' என்று சொல்லி விட்டு, ''இப்ப நான் இங்க பொறுப்பா இருக்கிறன்'' என்றான். ''தம்பி நான்குமாரை ஒருக்கா காணலாமே'' என்றேன். ''ஓமண்ணை, கொஞ்சம் இருங்கோ, இந்தா வரச் சொல்லுறன்'' என்றபடி உள்ளே போனான்.

சில நிமிடங்கள் மௌனமாகக் கரைந்தன. ''அப்பா'' என்ற குரலைக் கேட்டு தலை நிமிர்ந்தேன். ''ஆ குமார், வா'' என்றேன். முன்னைவிட அவன் முகம் பொலிவுடன் இருந்தது. ''அப்பா, பார்க்க மட்டும் தானே வந்தனீங்கள்?'' என்ற அவன் குரல், எங்கே தன்னைக் கூட்டிப் போகத்தான் வந்திருப்பாரோ? என்று எச்சரிக்கையோடு ஒலித்தது. ''ஓம் குமார்' என்றேன். அவன் முகம்இப்போது மேலும் பூரித்தது.

''அப்பா, நான் சேர்ந்ததைப் பற்றி, நீங்கள் படிச்சவர் விளங்கிக் கொண்டிருப்பியள், ஆனா அம்மா பேதை மனம், அவ நிச்சயம் கவலைப் படத்தான் செய்வா. நீங்கதான் அவக்கு விளங்கப்படுத்தோணும்'' என்றவன் தொடர்ந்து ''இஞ்ச இருக்கிற ஒவ்வொரு போராளியும் தன்ரை இனசனத்தை மறந்து, தன்ரை சுகபோகத்தை மறந்து, எங்கட மண்ணுக்காண்டி, மக்களுக்காண்டி வந்திருக்கினம். அந்த வரிசையிலே நானும் சேர்ந்திருக்கிறதைப் பற்றி மிச்சம் பெருமைப்படுறன். வீட்டில இருக்கேக்க ஓடி ஒளிச்ச நான், இப்ப அநியாயத்தை எதிர்த்து நேருக்கு நேர் மோத தயாராக இருக்கிறன். வீணாச் சாகிறதை விட வீரச்சாவு மேல் எண்டு உணர்ந்திட்டன், நீங்கள் எண்ட உணர்வை வடிவா புரிஞ்சு கொண்டிருப்பியள்'' என்று முடித்தான்.

என் மனதில் கொஞ்ச நஞ்சமிருந்த வலியும் மறைந்தது. புராணங்களில் முருகன் சிவனுக்கு தகப்பன் சுவாமியாக உபதேசித்தது நினைவில் வந்தது.

''அப்ப நான் வாறன்'' என்றேன் ஓமப்பா, அம்மாவையும் தம்பியவையையும் கேட்டதாச் சொல்லுங்கோ'' என்றான்.

எனது கால்கள் நடைபோடத் துவங்கின. திரும்பிப் பார்த்தேன். குமாரின் முகம்எனக்குத் தெரியவில்லை. ஒரு வீரனின் முகம்தெரிந்தது. சிரித்துக்கொண்டு கையசைத்தான் ஒரு வீரப் புலியினை பெற்றவன் என்ற பூரிப்போடு நடக்கத் தொடங்கினேன்.

முற்றும்

## இதுவே நேரம்

இது ஒரு பொற் காலம் - நாம்
இழந்ததும் பெறும் நேரம்
புது வகை விதை தூவி - புலி
அறுவடை செய்யும் நேரம்.

விதியொடும் விளையாடும்
வாழ்வினி மணம் வீச
கதியிடும் புலியோடு - நீ
களம் புக எழும் நேரம்

மயக்கிடும் கற்பனைகள்
மிதியிட்டு துவைபட
தயக்கமின்றி வாள் எடுத்தே - தலை
அறுதிட விரைந்திடும் நேரம்.

அகிலமும் வியந்திடும் - புலி
அணிகளும் முடியிட
துயில் எழு தோழனே! - துன்பம்
மறைபடும் ஒளிமய நேரம்.

தலைவனின் ஆற்றலும் - தரும்
தமிழ் ஈழமென
தயங்காது நீ தோள் கொடுத்தே
தேடும் - சுதந்திர கால நேரம்.

நிலை கொள் தேசம் என - நீ
பிறந்த மண் நினைவுடனே
விலை கொடு உடல் பொருளை -
வேண்டும்
விடுதலை வரவிடும் நேரம்.

**கவிஞன் - வல்லை**

# உலகின் ஏழாவது அதிசயம்; இன்னும் புரியாத புதிராக!

எகிப்து நாட்டில், கெய்ரோ நகரிற்கு மேற்கே, நைல் நதிக்கரையில்கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான பிரமிடுகள் உலகின் ஏழாவது அதிசயம்.

480 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள சியாப்ஸ் பிரமிடு, மனித குலத்தால் கட்டப்பட்டுள்ள மாபெரும் கட்டடம் துல்லியமான கட்டடக் கலை நுணுக்கமும், கணித நுட்பமும், இன்னும் உலகை வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றன. 500 மைல்களிற்குத் தெற்கே உள்ள அஸ்ராண் மலைகளில் இருந்து இரண்டு தொன் முதல் 70 தொன்வரையிலானபெரிய கற்களை அவர்கள்எப்படி நைல் நதி வழியே கொண்டு வந்தார்கள்; எப்படி அதை அவ்வளவு உயரத்திற்கு ஏற்றி அரை மில்லிமீற்றர் அளவிற்கு துல்லியமாக, 'நகையில் கல் பதிப்பது போல' அமைத்தார்கள் என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது.

இது கட்டப்பட்டு 4500 ஆண்டுகளிற்கு மேல் ஆகிறது.

இந்த சியாப்ஸ் பிரமிடும், சுற்றிலும் சிதிலமான நிலையில் உள்ள சுமார் 30 பிரமிடுகளும் சுமார் ஆயிரம் ஆண்டுகளிற்கு மேலாகத் தொடர்ந்து ஆராயப்பட்டு வந்துள்ளன.

பொன்னும், மணியும் தேடிப் போனவர்களே அதிகம். உள்ளே நுழைய எந்த வாயிலும் எவர்க்கும் தென்படவில்லை கடுமையான சோதனைகளிற்குப் பிறகு 1638இல் ஜான் க்ரீவ்ஸ் என்ற ஆங்கிலேயக் கணித ஆசிரியர் தான் முதல் முதலாகப் பிரமிடுக்குள் பிரவேசித்தவர். இவர் தந்த தகவல்களும், அளவுகளும் விஞ்ஞானி ஐசாக் நியூட்டனை பிரமிக்க வைத்ததாம்!

அதன் பின்பு ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடந்தது.

எகிப்தைக் கைப்பற்றிய நெப்போலியன் முதலில் செய்த காரியம், பிரமிடைப் பார்க்கப் போனது தான்! உள்ளே போய், அங்கே இருக்கும் 'மன்னர் அறையில், நீண்ட நேரம் அமர்ந்து விட்டு வந்த நெற்போலியனின் முகம் வெளுத்துப்போய், ஒரு மாதிரியாய் இருந்ததாம்.

''உள்ளே எப்படி இருந்தது?" என்ற கேள்விக்கு அவன் வாய் திறக்கவே இல்லை! அதன் பிறகு எத்தனையோ தடவை அதைப் பற்றிக் கேட்டும் அவன் பதில் சொல்லவேயில்லை! அவன் நாடு கடத்தப்பட்டு, செயின்ட் ஹெலனா தீவில் வாழ்ந்து வந்த கடைசி காலத்தில் ஒருவர் கேட்டபோது, ''சொல்லி என்ன பயன்? நம்பவா போகிறீர்கள்?'' என்று சொல்லி விட்டானாம்!

பிரமிடுக்குள் நெற்போலியனுக்கு நேர்ந்த அதிசய அனுபவம் அவனோடு புதைந்து விட, ஆராய்ச்சியாளர்கள் ஓய்பவில்லை. தொடர்ந்து பலர் உள்ளே சென்று ஆராய முற்பட்டார்கள். அந்தப் பிரமிடுக்குள் எந்த மன்னரின் உடலோ நகை நட்டுக்களோ இருக்கவில்லை என்பது முக்கியமான அம்சம்!

உள்ளிருக்கும்மன்னர்அறை, அந்தப் பிரமிட்டின் மொத்த உயரத்தில், மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் (பூமிமட்டத்திலிருந்து) அமைக்கப்பட்டுள்ளது என்பது மிக முக்கியமான விஷயம்! இந்த அளவிலிருந்துதான் பல அற்புதங்கள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன!

19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில்கப்டன் கேவிஜூலியா, கர்னல் ஹெவார்ட் ஆகியோரின் தேடலில் மேலும் பல உண்மைகள் வெளிப்பட்டன. ''சீராகக் காற்று உள்ளே வர வழி செய்யப்பட்டிருந்தது. அந்த அறையில் எந்தப் பொருளும் கெட்டுப் போவதில்லை. பல நூற்றாண்டுகளாக பாலைவனப் பூனை, நாய் முதலிய விலங்குகளின்உடல்கள்அழுகி, நாறாமல் அப்படியே இருந்தன! கொடிய பாலை வெப்பப் பகுதியில் உள்ள பிரமிடின் உள் அறையில், எப்போதும் ஒரே சீரான வெப்ப நிலை (68°F) உள்ளது! இந்த அறையில் ஏதோ ஒரு மர்மமான சக்தி பிறக்கிறது! இந்த சக்தி விபரிப்புக்கு அப்பாற்பட்டது!'' என்றெல்லாம் அவர்கள் கண்டு பிடித்துப் பகிரங்கப்படுத்தினார்கள்!

கடைசியாக ஒரு தெளிவு பிறந்தது. எகிப்தியர்கள் சில பிரமிடுகளுக்குள் சவங்களை வைத்திருந்தாலும், பிரமிடு என்பது சவக்கல்லறை அல்ல; தியான மண்டபம்! சக்தி மையம்!

இதில் மாய மந்திர சக்தி எதுவும் இல்லை. இதன் மகத்தான சக்தி, இதன் அளவில் தான் அடங்கியிருக்கிறது என்ற உண்மை வெளிப்பட்ட பின் இதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று முதலில் இறங்கியவர் போவிஸ் என்ற பிரெஞ்சுக்காரர்.

ஒரு மீற்றர் செங்குத்துஉயரமுள்ள ஒரு மாதிரி பிரமிடை, சியாப்ஸ் பிரமிடின் அதே விகிதாசாரத்தில் அமைத்து, உள்ளே பலவித பொருள்களை வைத்து சோதித்ததில் பல அதிசயங்கள் நிகழ்ந்தன!

இந்த அதிசயங்களை அவர் மூடி மறைக்காமல் ஒரு பெரிய ஆராய்ச்சிப்பிரசுரத்தின் மூலம் உலகிற்கு பகிரங்கப்படுத்தினார்.

இந்த ஆராய்ச்சியை அடிப்படையாக வைத்து சோதித்துப் பார்த்தவர்தான் செக்கோஸ்லாவோக்கிய எஞ்சினியர் ட்ரபெல். சாதாரண பிளேடு 200 தடவை பயன் பட்டதை நிரூபித்துக்காட்டி, பிராக் நகர பதிவுப் பிரிவில் 'ரேஸர் பிளேட் ஷார்ப்னர்' என்ற கருவியாக 6 அங்குல உயரமுள்ளஅட்டை பிரமிடை இவர் பதிவு செய்து கொண்டார்.

உலக அதிசயமான பிரமிடு சவரக்கத்தி தீட்டும் கருவியாக[ தாழ்ந்து விட்டாலும், சோதனைகள் நின்றுவிடவில்லை; அதே சமயத்தில் ஒரு நிறுவனம் இவ்வகை 'பிளேடு ஷார்ப்னர்' களைச் செய்துஅமோகமாக விற்பனை செய்தது. சில ஐரோப்பிய நாடுகளிலும், சோவியத் ரஷ்யாவிலும் இது அமோகமாகப் பரவியது. பின்னால் தொடர்ந்த சோதனைகளின் விளைவாக நிறுவப்பட்டுள்ள உண்மைகள்:

- ஒரு சாதாரண பிளேடைக் கொண்டு 200 தடவை சவரம் செய்யலாம்!
- இதற்குள் வைக்கப்படும் ஒரு குவளை நீர் மகா சக்தி வாய்ந்த தீர்த்தமாக மாறுகிறது!
- இதற்குள் வைக்கப்படும் பொருள் எதுவும் கெடுவதில்லை.
- செடிகள் வேகமாக வளரும்.
- இதற்குள் வைக்கப்படும் விதைகள் வீரியம் பெறும்.
- இந்த பிரமிடு வைக்கப்படும் அறை தூய்மை அடைகிறது. நோயாளிகள் விரைவில் குணமடைகிறார்கள்.
- இதைத் தொப்பி போல சிறிது நேரம் வைத்திருந்தால் தலைவலி நீங்கும். புத்தி கூர்மைப்படும்.
- இதற்குள் வைக்கப்படும் நகைகள் பளபளப்படைகின்றன.
- முழங்கால், வயிறு, மார்பு, முதுகு முதலிய இடங்களின் மீது வைத்து அங்கு ஏற்படும் தொல்லைகளைப் போக்கலாம்.
- தலைமாட்டில் வைத்து நிம்மதியாக உறங்கலாம். வாதம் குணமாகும்.

பட்டியல் மிக நீளம்.

அமெரிக்காவில் டெக்ஸாஸ மாநிலத்தின் ஹூஸ்டன் நகரில் ஒருபெரிய மாதா கோவில் பிரமிடு வடிவில் அதே விகிதாசாரத்தில் கட்டப்பட்டு வருகிறது. இதற்குள் மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் 9206 பேர் அமர்ந்து ஒரே சமயத்தில் பிரார்த்தனை செய்யும் வகையில் தளம் அமைக்கப்படுகிறது.

இதே விகிதாசாரத்தில், உணவு விடுதிகள் (டென்வர் நகரில்) மருத்துவ நிலையங்கள் முதலியவை கட்டப்பட்டு வருகின்றன.

கோவை நகரில் உள்ள பெர்க்ஸ் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில், திரு. இராம அரங்கநாதன் ஒரு 18 அடி உயர பிரமிட் கட்டியுள்ளார். இரும்பு கலவாத, மின்சாரம் சேராத இந்த பிரமிடு கட்ட 5 லட்சம் செலவாகியுள்ளது.பக்கத்து அறையில் இருந்து சுரங்க வழி அமைக்கப்பட்டு அழகிய தியான மண்டபமாக அமைக்கப்பட்டுள்ள இதன் சுரங்க வாயிலில் 'சாதி, மத, மொழி, நிற, இன, பால் வேறுபாடுகள் இல்லாத சக்தி மையம்' என்ற வசனம் எழுதப்பட்டுள்ளது இரண்டு தடவை கெய்ரோ சென்று பிரமிடுகளைப் பார்த்துவிட்டு வந்து இந்தபிரமிடை இவர் அமைத்திருக்கிறார். உள்ளே போய் சிறிது நேரம் அமர்ந்து வந்தால் உள்ளத்திலும், உடலிலும் புதிய சக்தி பிறக்கிறது என்று சொல்கிறார்கள்.

## பிரமிடு ஒரு கணித அதிசயம்

- 'கிரேட் பிரமிட்' என்று அழைக்கப்படும் சியாப்ஸ் பிரமிட் 13 ஏக்கர் பரப்பளவுடையது. உயரம் 480அடி; ஒரு அடிப்பக்க நீளம் 760 அடி.
- இதைக் கட்ட 30 முதல் 56 ஆண்டுகள் பிடித்திருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.
- இதன் உச்சியின் மேல் வரையப்பட்டிருக்கும் ஒரு அட்சரேகை... நம் பூமியின் கடல்களையும், நிலப்பரப்பையும் இரு சம பாகங்களாகப்பிரிக்கின்றன.
- இதன் பரப்பளவை உயரத்தில் இரு மடங்கால் வகுத்தால் கிடைப்பது புகழ் பெற்ற எண்ணாகிய 22/7 = 3.14159 ஆகும்!
- இதன் செங்குத்து உயரத்தை 100 கோடியினால் பெருக்கினால் வருவது நம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம்!
- பைபிளில் சொல்லப்படுகிற நோவாவின் மிதப்பும், பிரமிடும் ஒரே விகிதாசாரத்தில் இருப்பதாக ஜான் டெய்லர் என்பவர் கணக்கிட்டுள்ளார்!
- பிரமிட் என்பது கிரேக்கச் சொல். 'உள்ளேநெருப்பைக் கொண்டது' என்பது இதன் பொருள்.
- இதன் எடை 68,48,000 தொன்கள்!
- எதையும் துல்லியமாகக் கண்டு பிடிக்க முடியாதபடி ஐ. பி. எம். 1130 கம்பியூட்டர்களை குழப்பிக் கொண்டிருக்கிறது இந்த பிரமிட்!
- பிரமிட் வடிவத்தின் அபூர்வ சக்திகளை அறியாமலேயே, கம்போடியா, வியட்நாம் முதலிய கிழக்காசிய நாடுகளிலும், கேரளாவிலும், பிரமிடு வடிவத் தொப்பிகளை உழவர்கள் அணிந்து வருகிறார்கள்.

நன்றி: புதிய பார்வை


வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

**நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்**



**இடம்: சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் காலம்: 16.10.93 நேரம்: இரவு 6.00 மணி**

**நிகழ்ச்சிகள்**

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3''200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

**டிக்கெற் கிடைக்குமிடம்:**

| | |
|---|---|
| ''வெஸ்கோ'' | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| ''குறிஞ்சி'' | திருநெல்வேலி சந்தை |
| ''நாதன் மருந்தகம்'' | கல்வியங்காடு |
| ''தாவடி மெடிக்கல்ஸ்'' | கோண்டாவில் |
| ''மெடிஇஸ்குயர்ஸ்'' | மானிப்பாய் |
| ''மெடிப்பிளஸ்'' | சங்கானை |
| ஸ்ரீமுருகன் - | நெல்லியடி பருத்தித்துறை |
| ''அம்பாள் பாமசி" | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முக்கியகுறிப்பு: யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்., சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(சி/7533) **வ. யா. ஆ. ம. வ. சங்கம்**

# மட்டக்களப்பில் இராணுவ ஆட்சி; காட்டு கந்தோரில் ஒரு கொலைக் கூடம்

மட்டக்களப்பு நகரையும், வாழைச்சேனை முதல் கல்லாறு வரையான கரையோரப் பகுதியை (எழுவான் கரை)யும் ஆக்கிரமித்துள்ள சிறிலங்காப் படைகள் அப்பகுதியில் 'சிவில்' நிர்வாகம் நடைபெற்று வருவதாகக் கூறி வருகின்றன. அரசாங்கமும் பத்திரிகைகளும் அங்கு 'அமைதி' நிலவுவதாகவும், 'இயல்பு' நிலைக்குத் திரும்பி விட்டதாகவும் பிரசாரம் செய்து வருகின்றன.

மட்டக்களப்பு நகரிலுள்ள காட்டிலாகா கந்தோர்தான் 'சிவில்' நிர்வாகத்தின்மையம். விசாரணைக்கென ...ங்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் எவரும் திரும்பி வருவதில்லை. 'காட்டுக் கந்தோர்' என மக்களால் அழைக்கப்படும் இவ் அலுவலகத்தில் உண்மையில் புலனாய்வுப் பிரிவினரே உள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் மக்கள் விசாரணைக்காக இங்கு கொண்டு வரப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் சாதாரண நிகழ்வு. புலிகள் என, அல்லது ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டு இக் காட்டுக் கந்தோருக்குக் கொண்டு வரப்பட்ட எவரும் இதுவரை விடுதலையானதில்லை யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க படிவங்கள் வழங்கும்போது கொல்லப்பட்டவர் புலிகள் உறுப்பினர் இல்லை என உறுதிப்படுத்த வேண்டும். நிவாரணப் படிவத்துடன் போகும் விதவைப் பெண்களில் அநேகர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

ஆனால் இவ்வாறு காட்டுக் கந்தோருக்குப் போய் நிவாரணம் பெற்ற விதவைப் பெண்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். 'காட்டுக்கந்தோர்' எனப்படும் இவ் இடம் இன்று ஒரு பயங்கர பலிக்களமாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் பஸ் நிலையத்திற்கு முன் இயங்கும் பொலிஸ் நிலையத்தில் அனைத்துப் பயணிகளும் அவர்களுடைய பொதிகளும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. அங்கிருந்து புறப்படுகின்ற அனைத்துப் பாதைகளிலும் முன்னைய இந்தியப்படைகளின் சென்றிகள் புதுப்பிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அங்கு மீண்டும் சோதிக்கப்படுகின்றனர். சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்களில் செல்வோர் அவற்றை உருட்டிக் கொண்டு சென்று சோதனைக்காக நீண்டவரிசைகளில் காத்திருக்க வேண்டும்.

நகரப்பகுதியை விட கிராமப் பகுதிகளுக்குச் சென்றால் நிலைமை அங்கு படுமோசமாக உள்ளது. கிராமங்களின் நிர்வாகம் முழுவதும் அங்குள்ள காவல் நிலையங்கள் மூலமே செய்யப்படுகின்றன. கிராமத்திலுள்ள மக்கள் கிராமங்களை விட்டு வெளியே செல்லும் போதும் உள்ளே செல்லும் போதும் அவற்றினூடாகவே செல்ல வேண்டும். கடைக்காரர்கள்தமக்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்ய நகருக்குச் செல்ல முன்னர் தேவையான பொருட்களின் பட்டியலை காவல் நிலையத்தில் சமர்ப்பிக்கவேண்டும் தேவையான பொருட்களின் அளவை காவல் நிலையத்தினரே தீர்மானிக்கின்றனர். நகரிலிருந்து திரும்பும் போது பட்டியலும் பொருளும் சரி பார்க்கப்பட்டே அனுமதிக்கப்படுகிறது. தமக்குத் தேவையானவற்றை படையினர் எடுத்துக்கொள்வர்.

ஏறத்தாழ கிராமத்துக்கு ஒரு முகாம் என்ற அளவில் கிராமங்கள் முழுவதும் சிறிலங்கா இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர். எந்தக் கிராமம் எப்பொழுது சுற்றிவளைக்கப்படும் என்று யாருக்கும் தெரியாது. முதல்நாள் நள்ளிரவே கிராமத்தைச் சுற்றிவளைத்து பதுங்கியிருக்கும் படையினர் காலையில் வயது, பால் வேறுபாடின்றி அனைவரையும் திறந்த வெளியொன்றுக்கு அழைத்துச் சென்று சோதனை இடுகின்றனர். இதன் போது கைது செய்யப்படுகின்றவர்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் வாழைச்சேனை முதல் கல்லாறு வரையான கரையோரப்பகுதி- எழுவான்கரை கிராமங்களில் நிகழும் அன்றாட சம்பவம் இது

> மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரையின் தொகுப்பு இதுவாகும்

சுற்றி வளைப்பின்போது கைது செய்வதற்கு முகமூடிகள் பயன்படுத்தப்படுவர். அல்லது தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் படையினருடன் கூடவருவர். ஒவ்வொரு சுற்றிவளைப்பின்போதும் அம் முகமூடிகள் ஒருசிலரையாவது காட்டிக்கொடுக்க வேண்டும், அல்லது படையினரால் தாக்கப்படுவர். படையினரின் சித்திரவதைக்குப் பயந்து தனது தனிப்பட்ட எதிரிகளையோ அல்லது தனக்குத் தெரிந்தவர்களையோ அவர்கள் காட்டிக் கொடுத்தே தீருவர்.

இச்சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்ட பலரது விபரங்கள் இன்றுவரை தெரியாது, இவர்களின் சித்திரவதைகள், அடிகள் சொல்லும் தரமன்று. சுற்றிவளைப்பின் போது அடையாளம் காணக் கொண்டுவரப்படும் பெண்களில்சிலரை படையினர் வேண்டுமென்றே முகமூடிகளைக் கொண்டு தலையாட்டுவித்து கைதுசெய்து கொண்டு செல்கின்றனர்,

கொம்மாந்துறை வாசி ஒருவர்சொன்னார்:

'நான் கைதுசெய்யப்பட்ட போது என்னுடன் எனது ஊரைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரையும் கைது செய்தனர். முகாமின் பக்கத்து அறையிலிருந்து அலறல்வராத இரவுகளே இல்லை. மூன்று வாரத்தின் பின் விடுதலையானபோது அவள் என்னிடம் சொன்னாள், இதற்குப் பின்பும் வாழத்தான் வேண்டுமா? என்று''.

படையினரால் கைது செய்யப்பட்ட தனது கணவரை விடுவிக்கத் தானும் சேர்ந்து முகாமுக்குள் நுழைந்த ஒரு பெண்ணிற்கு நிகழ்ந்ததை ஒரு கிராமவாசி விபரித்தார். ஒரு மாத காலமளவில் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்ட அப் பெண் சித்தைப் பிரமை பிடித்தவராக காணப்படுகிறார். இவருக்கு என்ன நடந்ததென்று யாருக்கும்தெரியாது. அவரது கணவன் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதும் இதுவரை தெரியாது.

படுவான்கரைப்பகுதி மக்களுக்கு எதுவித உதவியும் வழங்கப்படுவதில்லை. அவர்களுடைய வயல்கள் விதைக்கப்படவில்லை. வாவியிலோ, கடலிலோ மீன் பிடிக்கத் தடை. எதுவித வருமானமும் அற்ற நிலையில் உணவுக்கே திண்டாடவேண்டி உள்ளது.

எழுவான் கரை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் படுவான்கரையில் வயல் விதைத்திருந்தார். ஆனால் அறுவடை செய்ய படையினர் அவரிடம் காணி உறுதியைக் கேட்டனர். அவரிடம் உறுதி இருக்கவில்லை. எனவே படையினர் அவரது வயலுக்குத் தீவைத்து விட்டனர். இவ்வாறு படையினர் தீவைத்த வயல்கள் ஏராளம்.

கிழக்கு மாகாணத்தில்20க்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. இது தவிர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் புள்ளி விபரம் திரட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இவையனைத்தும் பிரதானமாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட எழுவான் கரையிலேயே இயங்குகின்றன. படுவான் கரையில் இயங்க இவற்றுக்கு இராணுவம் அனுமதிக்காது. படையினரால் நடாத்தப்படும் கைதுகள், சித்திரவதைகள் குறித்தோ, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பிலோ இவர்களில் எவரும் குரல்கொடுப்பதில்லை என மக்கள் கூறுகின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் 'சிவில்' நிர்வாகம் உட்பட அனைத்தும் பிரிகேடியர் றொகான் குணவர்த்தனவின் கையில் உள்ளது. இதனால் தங்களது நிலைமையை எடுத்துக் கூற மக்களுக்கு எதுவித வழியும் இல்லை.

மட்டக்களப்புகச்சேரி, மாநகரசபை என்பனவற்றை இராணுவத்தினர் பொறுப்பேற்று அங்கு பெரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நீதிமன்றக் கட்டிடத்திலுள்ள இராணுவத்தை அகற்றி நீதிமன்றத்தைஇயக்குவதே அதன் நோக்கம் என சொல்லப்படுகிறது.

உண்மையில் கோட்டையையும், மாநகரசபையையும் இணைத்துப் பெரிய முகாமை அமைப்பதே படையினரின் நோக்கம் இதனைசுற்றிபாரிய பாதுகாப்பு வலயம் ஒன்றும் அமைக்கப்பட விருப்பதாக சொல்லப்படுகிறது. இது மட்டக்களப்பு நகரின் கணிசமான பகுதியை உள்ளடக்குவதாக அமையும் என்றும் சொல்லப்படுகிறது.

இதன் மூலம் மட்டக்களப்பு வாவியின் மேற்குப்புறம் முகாமின் பாதுகாப்புக்கு என்ற போர்வையில் மீன் பிடிக்கு தடைசெய்யப்படும் இதனால் இதனை நம்பியுள்ள ஆயிரக் கணக்கான மீனவர் தொழிலிழப்பர் எனவும் அஞ்சப்படுகிறது.

## விளக்கு

மாணவர்களின் வளர்ச்சியில் துணையாகநிற்கும் அனைத்து நல்லாசிரியர் பண்புகளையும் கட்டுரை உள்ளடக்கியதாகின்றது.

— அடுத்து இளைப்பாறிய ஆசிரியர் ஆ இராமசாமியை க. வை தனேஸ்வரனும், சு. லோகதாசனும் பேட்டி கண்டு ஒரு நேர்காணலைத் தொகுத்தளித்துள்ளனர் விளக்குஇதழ் இதைச் செய்ய முற்பட்டது குறிப்பிடத்தக்கது. நேர்காணலுக்குரிய நேர்த்தியாகக் கேள்விகள் அமையாததால் நேர்காணல் கட்டுரையைப்போல் தோற்றம் தருகின்றது.

— ஆசிரியர் சமூகத்தில் வாண்மையைதொழில்விருத்தி செய்வது விளக்குஇதழில் முக்கிய நோக்குகளில் ஒன்றாகும் ஆனால், உயர்கல்லூரி அதிபர்களையும், இளைப்பாறிய அதிபர்களையும், விரிவுரையாளரையும், அரச அதிபரையும், ஆசிரியரையும் ஒன்றிணைத்துப் பார்த்து விட முடியாது. ஓர் ஆசிரியராவது அல்லது சிறு பாடசாலை அதிபராவது விளக்கின் தளத்தை பயன்பொருத்தமாகப் பாவித்தார்கள் என்று கூறிவிடமுடியாது. அதனால் விளக்கு ஆசிரியனுக்குத் துணையாக வருகின்றது என்ற கருத்தின் பொருத்தம் நழுவிப் போகிறது. சாதாரண ஆசிரியர்களின் ஆக்கங்களும் இங்கு முதன்மை பெற வேண்டும்.

— இந்த மாதாந்தர இதழில் இன்னொரு அம்சம் அட்டைப்படம். அட்டைப்படத்தின் சாயலில் சில படங்கள் திரும்பத் திரும்ப ஒரு சில இதழ்களில் வந்துள்ளன. படைப்பியக்கத்தில்Plagiarismஎன்று ஒன்று கிடையாதென்றாலும் இதே படம்தான் அட்டைப் படமாகத் தொடர்ந்து வெளி வரும் என்றால் அதைத் தவிர்த்துக் கொள்வது நன்று. இது அவர்கள் விருப்பம்.

— மற்றும்படி மதிப்புத் தரும் முறையில் ஒருவரின் பெயருக்கு முன்னால் இடப்படும் 'திரு' என்ற அடை ஒரு கட்டுரை ஆசிரியரின் பெயருக்கு முன்னால் இடப்பட்டிருப்பதும், மற்றவருக்கு இல்லாது இருப்பதும் சின்ன விஷயம். ஆனால் சிறு பத்திரிகைகளில் கட்டுரையாளரின் பெயருக்கு முன்னுக்கும், பின்னுக்கும் அடை போடும் மரபில்லை என்பதைத்தான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டி உள்ளது.

— ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கட்டுரை ஆசிரியர்கள் நல்ல தரத்திலுள்ள கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். நசிவு எழுத்து எதுவும் இல்லை. கட்டுரையாளர் விளக்கின் வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். நாற்பத்தாறு பக்க அளவில் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வித் துறைசார் சிறு இதழ் வெளிவருவது அநேகமாக இதுதான் முதல் தடவையாக இருக்கும் இவ்விதழைத் தயாரித்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

— ஒரு கடைசிக் குறிப்பு: இந்தஇதழில்6,7,8ஆம் பக்கங்களில் இடம்பெறும் விடயங்கள் ஒரு சங்கிரகமா அல்லது வழக்கமான செய்திச் சரமா என்பதில் சந்தேகம். ஒரு தலைப்புக் கொடுத்துச் சுட்டினால் இது வரவேற்கப் படவேண்டிய பகுதி என்று படுகிறது. வடிவமைப்பில் பிறழ்வும், அட்டைப்பட வர்ண கலவையும் இதமாக இல்லை. இதை ஆசிரியரால் அடுத்த இதழில் எளிதாகத் தவிர்க்க முடியும்.

## தமிழா இன்னுமேன் தூக்கம்

பல்லவி

தமிழா இன்னுமேன் தூக்கம் — எம்
தாய் மண்ணை மீட்கவேன் தயக்கம்
அமிழ்தான எம்மொழி காக்க — நீ
அணியாகி வரவேன் சுணக்கம்
(தமிழா)

சரணங்கள்

எந்தையர் ஆண்ட எங்கள்
எழில் மிகு பூமி தன்னில்
சிங்களம் ஆண்டிட இங்கு
சீறியே வருகின்ற வேளை தன்னில்
(தமிழா)

மண்ணினை மீட்டிடும் போரினிலே
மாண்ட எம் வீரரின் ஆயுதங்கள்
உங்களின் வரவை எதிர்பார்த்து
உறங்கிக் கிடந்திடும் நேரமதில்
(தமிழா)

வீட்டுக்கொரு மகனே விரைந்து
விடுதலைக் களம் நோக்கி வா என்று
போர் - முரசொலிக்கும் நேரமதில்
புலியாகிப் போர்க்களம் புகுந்துவிட
(தமிழா)

- நா. பாஸ்கரன்


## "வட பிராந்திய பேக்கரி ஊழியர் பேரவை"

16.10.93 சனிக்கிழமை காலை 10 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு வட பிராந்தியத்தில் உள்ள சகல ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறும் உறுப்பினராகபதிவு செய்யாதவர்கள் அனைவரும் தங்கள் அங்கத்தவர் படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறும் அன்றைய தினம் நடைபெறும். ஒன்று கூடல் நிகழ்ச்சியில் த. ஈ. வி. புலிகள் தொழிற்சங்க பொறுப்பாளர் கலந்து சிறப்பு சொற்பெருக்காற்றுவார் என்பதையும் சகல தொழிலாளர் கவனத்துக்கும் தெரியப்படுத்திக்கொள்கிறோம் உரிமையாளர்கள் தயவு செய்து ஊழியர்களை அனுப்பி வைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

மணிமாமா பேக்கறி பில்டிங்
வல்லவன் வீதி,
இணுவில்.


தலைவர்,
இடைக்கால நிர்வாக சபை

(6287)

## எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில்)
(411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
அனைத்து பாடங்களுக்குமான
**O/L PAPER CLASS**
எமது வழமையான ஆசிரியர் குழு
**ஆரம்பம்: 16.10.93சனிக்கிழமை**
(சி-7706)

# 3-வது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S. K. செல்லையா

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகஸ்தர்)

மலர்வு: 12. 04. 1934
உதிர்வு: 18. 09. 1990

திதி: 15 – 10 – 1993

நினையாத நேரம் அணைந்த ஒளி விளக்கே
ஆண்டுகள் மூனறு ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம் துயரம். மீண்டு வரும் நினைவலையால் உருகியழும் எம்முள்ளம், எந்நாளும் உங்களையே எண்ணுதப்பா. தங்கள் ஆசியும் அறிவுரையும் எம்மை வழி நடத்துமப்பா.

என்றும் தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

பண்டித்தறை,
நெல்லியடி,
கரவெட்டி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

(5855)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## உணவு விநியோக ஒப்பந்தம் - 1994

1994ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைததியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப் படிவம் வழங்குவதற்கான இறுதித் திகதி 04-11-93 மதியம் 12.00 மணியாகும். முழுவிபரமும் 29 10-93 இல் வெளிவரும் அரச வர்த்தமானியில அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

ஒப்பம்:
வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

சு. சே. பி. பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி-7589)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சலவைச் சேவை ஒப்பந்தம் - 1994

1994ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவம் வழங்குவதற்கான கடைசி நாள் 04-11 93 மதியம் 12 மணியாகும். முழுவிபரங்களையும் 29-10-93இல் வெளியாகும் அரசாங்க வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

ஒப்பம்:
வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

சு.சே.பி.ப.பணிமனை, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7590)

## வெள்ளை

...ங்கங்களுக்காகவே கொண்டாடப்பட்டு வருகின்றது. அவை யாவன:

1. வெள்ளைப் பிரம்பு பற்றியும் அதனைத் தாங்கிச்செல்வோருக்குள்ள உரிமைகள் பற்றியும், பொது மக்களுக்குத் தெளிவு படுத்துவதன் மூலம் இதனைத் தாங்கிச் செல்வோருக்குப் பாதுகாப்பைப் பெறறுக் கொடுத்தல்.
2. விழிப்புலனற்றோரின் தகைமைகள், திறமைகள் என்பவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், சமுதாயத்திலே அவர்கள் பற்றி நிலவுகின்ற தவறான கருத்துக்கள், பிற்போக்கு எண்ணங்கள் என்பவற்றை நீக்குவதுமாகும்.

இந்தநாளிலே நாமும் விழிப்புலனற்றோர் பால் எமது சிந்தனையைச் சற்றே செலுத்துவது மிகவும் பொருத்தமாயிருக்கும். விழிப்புலனற்றோராலும் ஏனையவர்களைப் போல சுயமாக, சுய கௌரவத்துடன் வாழ முடியும் என்பது இன்று ஐயந்திரிபுக்கிடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளது. இருந்த போதிலும், இன்றும் எததனையோ விழிப்புலனற்றவர்கள் உரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படாததால் சமுதாயத்தின் சுமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் காணும் போது எமக்கு அனுதாபம் ஏற்படுவது இயல்பே. எனினும், வெறுமனே இவர்கள் மீது அனுதாப மழை பொழிவதால் ஆகப் போவது எதுவுமே இல்லை. இவர்களுக்கு உரிய கல்வி, தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதற்கு உதவ நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும்! முன்வர வேண்டும்; அதுவே நாம் அவர்களுக்குச் செய்கின்ற மிக உயர்ந்த உதவியாக, ஒப்பற்ற சேவையாக அமைய முடியும். இந்த நாளிலே நாம் ஒவ்வொருவரும் இந்த விடயம் பற்றி சற்று சிந்திப்போமேயானால், அதுவே ஒரு பெரும் சமுதாய மாற்றத்தின் ஆரம்ப நிலையாக அமையும் என்பதில் நிச்சயமாக இருகருத்துக்கள் இருக்க முடியாது.

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L கணிதம்

### Paper Class

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 1 —> | சனி, ஞாயிறு —> | 6—7 மணி —> | பகுதி 2 |
| பிரிவு 2 —> | ,, ,, —> | 7—8 மணி —> | பகுதி 2 |
| பிரிவு 3 —> | ,, ,, —> | 10-11 மணி —> | பகுதி 1 |
| பிரிவு 4 —> | ,, ,, —> | 4—5 மணி —> | பகுதி 1 |
| பிரிவு 5 —> | செவ்—வியா —> | 9—10 மணி —> | பகுதி 1 |
| பிரிவு 6 —> | திங்—வெள் —> | 3—4 மணி —> | பகுதி 2 |

ஆசிரியர்

திரு. B. P. பாஸ்கரன்

[கடந்த 18 வருட பகுதி 1, பகுதி 2 வினாக்களின் அலகு ரீதியான வினாவிடை வகுப்பு]

ஆரம்பம்:

**16.10.1993 சனிக்கிழமை**

(சி/7705)

# 1ஆவது பிறந்ததின வாழ்த்து



## செல்வன்:— இராஜகுமார் எழில்ராஜ்

மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இராஜகுமார் இராஜலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ''எழில்ராஜ்'' தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (15-10-93) வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், அப்பம்மா, அம்மம்மா, திருநெல்வேலி பெரியம்மா குடும்பத்தினர், சுவிஸ்லாந்து சின்ராசா பெரியப்பா குடும்பத்தினர், கொடிகாமம் ராஜா பெரியப்பா குடும்பத்தினர், மாலா அத்தை குடும்பத்தினர்,, ஈசன் சித்தப்பா, மற்றும் சுவிடனில் வசிக்கும் சுதந்திரராஜா பெரியமாமா குடும்பத்தினர், கொடிகாமம் இராசரட்ணம் பெரியப்பா, குடும்பத்தினர், தியாகலிங்கம் பெரியப்பா குடும்பத்தினர், கனடாவில் வசிக்கும் அருணாசலம் பெரியப்பா குடும்பத்தினர், சுவிஸ்லாந்து அருளானந்தம் மாமா குடும்பத்தினர் நுணாவில் ரஞ்சன் சின்னமாமா குடும்பத்தினர், பாலுமாமா, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இவரை பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புற வாழ வாழ்த்துகின்றார்கள்;

கொடிகாமம்.

தகவல்
K. P. Rajes

(சி-7701)

# 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை ஒரு தோற்றுப்போன முற்றுகை முயற்சி

“சிறிலங்கா அரச படைகள் அண்மையில் பெரும் பிரயத்தனத்துடன் மேற்கொண்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மடத்தனமானதும், அர்த்தமற்றதுமாகும்'' என முன்னாள் சிறிலங்கா விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்க குறிப்பிட்டதில் இருந்தே இந் நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பாதிப்பினைபுரிந்துகொள்ளமுடியும்.

இதேவேளை, யாழ்தேவி இராணுவ நடவடிக்கைபெரும் பிரயத்தனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை வலியுறுத்த இந் நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கை, இராணுவதளபாடங்களின்தொகை இரகசியம் பேண இராணுவத்தரப்பு எடுத்துக் கொண்ட முயற்சி என்பவையே போதுமானவையாகும்.

இந்த யாழ்தேவி நடவ்டிக்கையில் 10, 000க்கும் அதிகமானதுருப்பினர் பங்குகொண்டனர். ஆனால், சில சிங்கள பத்திரிகைகள் - லங்காதீப போன்றவை - 20,000 துருப்புக்கள் பயன்படுத்தப்பட்டதாகத்தெரிவிக்கின்றன. இதேவேளை, சிறிலங்கா இராணுவம் இம் மோதலில் பயன்படுத்தியது போன்று வேறு எந்த மோதலிலும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தவும் இல்லை. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் உடனடியாகவே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, யுத்த முனைக்கு அனுபப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன. அத்தோடு, ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம்.ஐ- 17 ரக உலங்கு வானூர்திகளும் களத்தில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான, பிரயத்தனங்களின் மத்தியில்ஆனால், இரகசியமாகமேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவநடவடிக்கையின் நோக்கம், தற்பொழுது இராணுவத் தளபதிகள் தெரிவிப்பதுபோல்,கிளாலி இறங்குதுறையில் இருந்த கடற்புலிகளின் தளத்தை அழிப்பதோ, அன்றி அங்கு மக்களின் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்கு நின்றிருந்த நூற்றுக் கணக்கான படகுகளை அழிப்பதோ அல்ல. இதன் பிரதான இலக்கு சாவகச்சேரியைப் பிடிப்பதாகும் இதன்மூலம் யாழ். குடாநாட்டைத் துண்டா... டப்பட்டிருந்தவேளை, ஆனையிறவுப் பகுதியில் - குறிஞ்சாத்தீவுப் பகுதி - இருந்து ஆரம்பமாகி, சாவகச்சேரிவரை கரை ஓரமாக காணப்படும் மணற்பாங்கான வண்டிற் பாதையே இராணுவ அணி நகரும் பிரதான மையவீதியாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ் இராணுவ அணி யாழ் கடல் நீரேரியின் கரையோரத்தில் இருந்து சுமார் 500 - 1000மீற்றர் வரையிலான அகலத்தில் பரந்து செல்வதாகவும், திட்டமிடப்பட்டிருந்தது. இடையிடையே இராணுவ அணி கச்சாய் வீதியைத் தொட்டுச் செல்வதாகவும், ஆனால், பெரும்பாலும் கச்சாய் வீதியைத் தவிர்த்து முன்னேறுவதுமே நோக்கமாகவும் இருந்தது. இத்திட்டத்தின் பிரகாரம் முன்னேறிய இராணுவ அணியே இரண்டாம் நாள் - செப்டம்பர் 29ஆம் திகதி - புலோப்பளைக்கும் அல்லிப்பளைக்கும் இடையில் கரையோரத்திற்கு அண்மையாக புலிகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகிப் பேரிழப்பைச் சந்தித்தது.

இத்தாக்குதல் திட்டத்தின் பிரகாரம், யாழ். குடாநாடு பூரண முற்றுகைக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனையிறவில் இருந்து சாவகச்சேரிவரை அமைக்கப்படும் இராணுவ வேலியானது யாழ். கடல் நீரேரியின் வடகரையோரத்தில் உள்ள சகல இறங்கு துறைகளையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என இராணுவம் கருதியது. அதாவது கிளாலி, கச்சாய் இறங்குதுறைகள் பூரண கட்டுப்பாட்டில் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதன் மூலம் யாழ். கடல் நீரேரியில் கடற்புலிகளின் நடமாட்டத்தை பூரணமாகக் கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டது மேலும், மண்டைதீவுக்கும், கல்முனைக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய கடற்பரப்பைக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் மூலம் காவல் புரியின் யாழ். குடாநாடு முற்றாகப் பெரு நிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்படுவதோடு பூரண முற்றுகை நிறைவாகும் என கருதப்பட்டது.

இம் முற்றுகை நிறைவு செய்யப்படும் பட்சத்தில், இம் மாரி காலம் முடிவடையும் வரை பொறுத்திருந்து விட்டு அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் யாழ் நகர் மீதான தாக்குதலுக்கு அப்பால் நகர்த்திச் செல்ல முடியாது ஆக்கிற்று. இதே வேளை கிளாலி இறங்குதுறைப்பகுதியில் தரித்துநிற்க முடியுமா என்ற கேள்வியையும் பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் உருவாக்கியது.


இராணுவத்தரப்பில் இவ்வாறான கேள்வி எழுப்புவதில் நியாயம் இல்லாமலும் இல்லை. காரணம் என்னவெனில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை திட்டமிட்டவாறு முழுமை பெறவில்லை. இரண்டாவது யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட படிப்பினையாகும் அதாவது முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணத்திலக்கா 'யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பலத்தையும், உறுதிப்பாட்டையும் இராணுவம் விளங்கிக்கொள்ள தவறிவிட்டது'' எனச் சுட்டிக்காட்டிய தவறை பின்னர் இராணுவம் உணர்ந்திருக்க வேண்டும்.

அதாவது கடந்த ஆண்டில் பல தோல்விகளைச் சந்தித்த இராணுவம் கிளாலியைக் ... யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முற்றுப் பெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால் இப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன.

கிளாலியில் இராணுவம் தரித்து நிற்குமாயின் ஆனையிறவு முகாமிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர்தொலைவில் உள்ள இம்முகாமின் விநியோகம் பெரும் சிரமம் மிக்கதொன்றாகவே இருக்கும். ஆனையிறவில் இருந்து தரைவழியாக விநியோகம் மேற்கொள்வதென்பது மீண்டும் ஒருபத்துக் கிலோமீற்றருக்கானஇராணுவ வேலி ஒன்றை அமைக்கவேண்டிய நிலையை உருவாக்குவதாகும். இவ் இராணுவ வேலியின் பாதுகாப்பு என்பது பெரும் சிரமம் மிக்கதொன்றாகவேஇருக்கும்.

மேலும், தொடரப்போகும் மாதங்களில் பருவமழை ஆரம்பிக்குமானால, தரை வழிவிநியோகப் பாதை என்பது மிகவும் சிரமம் மிக்கதாகவும், சிலவேளை துண்டிக்கப்படக் கூடிய அபாயங்களும் உண்டு. இந்நிலையில் கடல்வழி விநியோகமும் திருப்திகரமாக மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியப் ... விடுதலைப்புலிகள் மோட்டோர் தாக்குதல் பிரிவின் திறன் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு மோட்டார் தாக்குதல் பிரிவின் சுடும் சக்தியும் அதிகரித்துள்ளது என்பது வெளிவந்துள்ளது- அதாவது அரை மணி நேரத்திற்குள் 160 துருப்பைக் காயப்படுத்தும் அளவிற்குப் புலிகளின் மோட்டோர் சுடும் பலம் உள்ளது வெளிக்காட்டப்பட்டது. இந் நிலையானது இராணுவம் கிளாலியில் தரித்து நிற்பதென்பது அதற்குப் பெரும்சேதத்தை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக்கும் என்பது இராணுவத்தால் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது போல் தெரிகின்றது.

மேலும்,ஆரம்பமாகும்மாரிப் பருவத்தில் கிளாலியில் தரித்திருக்கும் போது விமானப் படையின் பூரண ஒத்துழைப்பு ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்பதோடு இப்பகுதியில் நிறைந்துள்ள தென்னந் தோப்புக்கள், விமானப்படையின் தாக்குதல் இலக்குகளை மறைத்து விடுபவையாகவும், போராளிகளுக்கு பாதுகாப்பு அரணாகவும் உள்ளன. அதாவது, தென்னந்தோப்



வத்தரப்பு எடுத்துக் கொண்ட முயற்சி என்பவையே போதுமானவையாகும்.

இந்த யாழ்தேவி நடவடிக்கையில் 10,000க்கும் அதிகமானதுருப்பினர் பங்குகொண்டனர். ஆனால், சில சிங்கள பத்திரிகைகள் - லங்காதீப போன்றவை - 20,000 துருப்புக்கள் பயன்படுத்தப்பட்டதாகத்தெரிவிக்கின்றன. இதே வேளை, சிறிலங்கா இராணுவம் இம் மோதலில் பயன்படுத்தியது போன்று வேறு எந்த மோதலிலும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தவும் இல்லை. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் உடனடியாகவே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, யுத்த முனைக்கு அனுப்பப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன. அத்தோடு, ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம்.ஐ- 17 ரக உலங்கு வானூர்திகளும் களத்தில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான, பிரயத்தனங்களின் மத்தியில்ஆனால், இரகசியமாகமேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவநடவடிக்கையின் நோக்கம், தற்பொழுது இராணுவத் தளபதிகள் தெரிவிப்பதுபோல்,கிளாலி இறங்குதுறையில் இருந்த கடற்புலிகளின் தளத்தை அழிப்பதோ, அன்றி அங்கு மக்களின் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்கு நின்றிருந்த நூற்றுக் கணக்கான படகுகளை அழிப்பதோ அல்ல. இதன் பிரதான இலக்கு சாவகச்சேரியைப் பிடிப்பதாகும் இதன்மூலம் யாழ். குடாநாட்டு முற்றுகையை முழுமைப்படுத்துவதாகும்.

அதாவது ஆனையிறவு முகாமிலிருந்து சாவகச்சேரிவரையுள்ளசுமார்20மைல் - 32கி.மீற்றர் - நீளமான பிரதேசத்தைக் கைப்பற்றுவதாகும். இதன் மூலம் யாழ். கடல் நீரேரியின் வடபகுதி முற்றாக இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர திட்டமிடப்பட்டது. இது யாழ். குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியான வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து இயக்கச்சி - ஆனையிறவு ஊடாக சாவகச்சேரி வரையான ஒரு நீண்ட, ஒடுங்கிய பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கில்ஆனது ஆகும். இதனை யாழ்ப்பாண முற்றுகையின் இறுதிக் கட்டம் எனக் கொள்ளலாம்.


இதன் பிரகாரம், 'ஒப்பரேசன் யாழ்தேவி' நடவடிக்கையின்போது இராணுவம், ஆனையிறவு - இயக்கச்சிப் பகுதியில் இருந்து ஒரு ஒடுங்கிய வழி ஊடாக சாவகச்சேரி வரை முன்னேறுவதென திட்டமிடப்பட்டிருந்தது. நகரும் இப்படை அணியின் தென் எல்லையாக யாழ் கடல்நீரேரியும், வட எல்லையாக சாவகச்சேரியில் இருந்து புலோப்பளை வரை செல்லும் கச்சாய் வீதியும் அமைவதாக திட்டமிணுவ அணியே இரண்டாம் நாள் - செப்டம்பர் 29ஆம் திகதி - புலோப்பளைக்கும் அல்லிப்பளைக்கும் இடையில் கரையோரத்திற்கு அண்மையாக புலிகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகிப் பேரிழப்பைச் சந்தித்தது.

இத்தாக்குதல் திட்டத்தின் பிரகாரம், யாழ். குடாநாடு பூரண முற்றுகைக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனையிறவில் இருந்து சாவகச்சேரிவரை அமைக்கப்படும் இராணுவ வேலியானது யாழ். கடல் நீரேரியின் வடகரையோரத்தில் உள்ள சகல இறங்கு துறைகளையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என இராணுவம் கருதியது. அதாவது கிளாலி, கச்சாய் இறங்குதுறைகள் பூரண கட்டுப்பாட்டில் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதன் மூலம் யாழ். கடல் நீரேரியில் கடற்புலிகளின் நடமாட்டத்தை பூரணமாகக் கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டது மேலும், மண்டைதீவுக்கும், கல்முனைக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய கடற்பரப்பைக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் மூலம் காவல் புரியின் யாழ். குடாநாடு முற்றாகப் பெரு நிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்படுவதோடு பூரண முற்றுகை நிறைவாகும் என கருதப்பட்டது.

இம் முற்றுகை நிறைவு செய்யப்படும் பட்சத்தில், இம் மாரி காலம் முடிவடையும் வரை பொறுத்திருந்து விட்டு அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் யாழ் நகர் மீதான தாக்குதலை நடத்துவதென்பதே இராணுவத்தின் இலக்காக இருக்கலாம் என்பதே இராணுவ விமர்சகர்களின் எதிர்பார்ப்பாகும். இம் மூன்று அல்லது நான்கு மாத முற்றுகைக் காலத்தில், புலிகளின் நடமாட்டம் பூரணமாகக் கட்டுப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்கள் பெருமளவில் பலவீனப்படுவார்கள் என்பதோடு அரசாங்கமும் பொருளாதாரத் தடையை மேலும் தீவிரமாக்குவதன் மூலம், மேலும் விடுதலைப் புலிகள் மீதும், தமிழர் மீதும் நெருக்குதலைத் திணிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அதாவது இக் காலப் பகுதி மாரிகாலம்- இராணுவத்தின் திட்டத்தின்படி 'கழுத்தை நெரிக்கும் ஒரு காலப்பகுதியாகவும், 1994 கோடைகாலம் அழித்தொழிக்கும் காலமாகவும் கருதப்பட்டது.

இவ்வாறாக, யாழ். குடாநாட்டு முற்றுகையை நிறைவு செய்யும் நடவடிக்கையே 'ஒப்பரேசன் யாழ்தேவி' எனப் பெயரிடப்பட்ட திட்டமாகும். ஆனால், இத்திட்டம் 29ஆம் திகதி நடந்த புலோப்பளை சமருடன் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியது. இராணுவத்திற்கு புலோப்பளையில் ஏற்பட்ட பேரிழப்பானது இராணுவத்தின் முன்னேற்றத்தை கிளாலி இறங்குதுறையாகக் கொண்டு நோக்குகையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பலத்தையும்,




உறுதிப்பாட்டையும் இராணுவம் விளங்கிக்கொள்ள தவறிவிட்டது'' எனச் சுட்டிக்காட்டிய தவறை பின்னர் இராணுவம் உணர்ந்திருக்க வேண்டும்.

அதாவது கடந்த ஆண்டில் பல தோல்விகளைச் சந்தித்த இராணுவம் கிளாலியைக் கைப்பற்றியமை பெரும் வெற்றியாக சிங்களப் பேரினவாதிகளாலும் பேரினவாத பத்திரிகைகளாலும் கொண்டாடப்பட்ட போது சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சோ அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கலங்கிப் போய்க் கிடந்தது

ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கை பூரணப்படுத்தப்படாமல் கிளாலியில் தரிப்பதென்பது தற்கொலைக்கு ஒப்பானதென்றே இராணுவ வட்டாரங்களில் பரவலாகக் கருதப்பட்டது. இதற்குக் காரணங்களும் உண்டு. இவற்றில் முக்கியமானவை கிளாலியில் தரித்து நிற்கும் இராணுவத்திற்கான விநியோகம் தொடர்பானதும் பாதுகாப்பு தொடர்பானதுமாக இருந்தன

அதாவது கிளாலியில் தரித்து நிற்கும் இராணுவம் அநேகமாக விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்திருக்கும். ஏனெனில் கடல் நீரேரி போக்குவரத்திற்கு தடையாகவுள்ள இம்முகாமை புலிகள் அப்புறப்படுத்த முனைவதில் ஆச்சரியம் கொள்வதற்கு எதுவுமில்லை. இந்நிலையில் இராணுவத்தின் பாதுகாப்பிற்கு அதாவது கிளாலி இராணுவ முகாமின் பாதுகாப்பிற்கு பெரும் உத்தரவாதம் தேவையாய் இருந்தது. ஆனால் மேலும், தொடரப்போகும் மாதங்களில் பருவமழை ஆரம்பிக்குமானால, தரைவழிவிநியோகப் பாதை என்பது மிகவும் சிரமம் மிக்கதாகவும், சிலவேளை துண்டிக்கப்படக் கூடிய அபாயங்களும் உண்டு. இந்நிலையில் கடல்வழி விநியோகமும் திருப்திகரமாக மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதாகவில்லை.

இதில், யாழ். கடல் நீரேரிப் பகுதி கடல்வழி விநியோகத்திற்கான ஆழமான கடற்பரப்பைக் கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமானதாகும். பெரும்பாலும் கடற்படையினரால்கடல்நீரேரிப் பகுதியில் பயன்படுத்தப்படும் நீருந்து விசைப் படகுகள் பெருந் தொகை துருப்புக்களுக்கு போதிய விநியோகத்தைச் செய்ய பெரியஅளவினதாக இல்லை அதேவேளை ஆழம் குறைந்தகடற்பரப்பில் மற்றைய பீரங்கிப் படகுகள் செல்வதற்கான் வாய்ப்புகளும் இல்லை. மேலும், கடற்படையினரிடம் போதியகடற்படைப் படகுகளும் இல்லை.

இதேவேளை, கடல் நீரேரியில் உள்ள கச்சாய் போன்ற இறங்குதுறைகளை விடுதலைப்புலிகள் பயன்படுத்தமுடியும் ஆகையினால், நீருந்து விசைப்படகு என்பவற்றால் செய்யப்படும் விநியோகத்தையும் கடற்புலிகளால் கட்டுப்படுத்தமுடியும் இந்நிலையில் கிளாலி இராணுவ- முகாமின் கழுத்து விடுதலைப்புலிகளால் நெரிக்கப்படுவது தவிர்க்கமுடியாதுபோய்விடும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளிடம் புலோப்பளை சமரில் சிறிலங்கா இராணுவம் படித்துக் கொண்ட பாடமும் கசப்பானதாகும். இச் சமரில் படையின் பூரண ஒத்துழைப்பு ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்பதோடு இப்பகுதியில் நிறைந்துள்ள தென்னந் தோப்புக்கள், விமானப்படையின் தாக்குதல் இலக்குகளை மறைத்து விடுபவையாகவும், போராளிகளுக்கு பாதுகாப்பு அரணாகவும் உள்ளன. அதாவது, தென்னந்தோப்புக்கள் இயற்கையானகாடுகள் போன்று விமானப்படையினருக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் அதேவேளை போரிடும் புலிகளுக்குப் பாதுகாப்பு அரண்களாகவும் உள்ளமை ஒப்பரேசன் யாழ்தேவியின் போதே ஓரளவு உணரப்பட்டன.

---

**ஜெயராஜ்**

---

இவ்வாறான மதிப்பீடுகளின் அடிப்படையில் தான் கிளாலியில் இருந்து இராணுவம் வாபஸ்பெறப்பட்டுள்ளது. அதாவது இப் பின்வாங்கல் விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தீவிரமாக்கலாம் என்ற அச்சத்தினால் எழுந்ததென்பதில் சந்தேகமில்லை. இதேவேளை புலோப்பளை சமர் மூலம் சிறிலங்கா இராணுவத்திற்கு விடுதலைப்புலிகள் போதித்துள்ள பாடத்தை 'சண்டே ஐலண்டில்' சுமித்திர பெனாண்டோ மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ''விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குள் நுழைந்தால் மரணமே'' என்பதே அதுவாகும்.

## குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துகள்

15-10-1993



### அருட்தந்தை A.P. தேவசகாயம் அடிகளார்

(தற்போதைய வவுனியா பங்குத்தந்தையும் நானாட்டான், நாவாந்துறை, பேசாலை, அடம்பன், மன்னார் முன்னாள் பங்குத்தந்தையும்.)

வெள்ளிவிழா காணும் அருட்தந்தையை இறைவன் அருள்பெற்று உடல் உள நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பற்றீமா வீதி, மாதகல். (6293) சாமிநாதர் குடும்பத்தினர்



## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

இன்று முதல் (15-10-93)

ROARING FIRE

(முழுநீள கராட்டிச் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில் காலை 10-30மணி, மாலை 4, 6 மணி

இத்துடன் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 2.30 மணிக்கு விசேட காட்சிகளாகவும்

பருத்தித்துறை, இளாலி கடற்கரும்புலிகளின் தாக்குதல், ஒப்பரேஷன் யாழ்தேவி தாக்குதல் சம்பவங்களை உள்ளடக்கிய

ஆகஸ்ட் மாத ஒளிவீச்சும் காண்பிக்கப்படும்

(சி-7544)



## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

Introduction to Computer and BASIC LANGUAGE

ஆரம்பம்: 23. 10. 1993
25. 10. 1993

★ வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும்
★ காலை, மாலை வகுப்புக்கள்.

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, st. PETERS LANE, HOSPITAL ROAD,
JAFFNA.

(சி-7709)


## நரோமா சேவை இடைநிறுத்தம்

யாழ். குடா நாட்டிற்கும் திருக்கோணமலைக்கும் இடையில் அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்துச்சேவையில் ஈடுபட்டுவரும் 'நரோமா' கப்பல் 19ஆம்திகதியும் 26ஆம் திகதியும் மட்டுமே சேவையில் ஈடுபடும்.

கடல் கொந்தளிப்பு காரணமாக பின்னர் இதன் சேவை இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

## பல்கலை. மாணவர் அனுமதி பாதிக்கப்பட்டோர் கூட்டம்

91 ஆகஸ்ட்/92 ஏப்ரல் (விசேட தேர்வு) உயர்தர தேர்விற்கு தோற்றி, பல்கலைக் கழக அனுமதிக்காக அண்மையில் வெளியிடப்பட்ட வெட்டுப் புள்ளிகள் தொடர்பாக பாதிக்கப்பட்டதாக கருதப்படும் மாணவர்களுக்கான கலந்துரையாடலும், இவ்விடயம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் எதிர் வரும் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்கள், மாணவர்களது பெற்றோர்கள், கருத்து தெரிவிக்க விரும்பும் நலன் விரும்பிகள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை வேண்டிக் கொள்கிறது.


சுன்னாகம் வர்த்தக சங்கத்தினரின் ஆதரவில்

## "மாபெரும் போர்க்கால கருத்தரங்கு"

காலம்: 16-10-93 சனிக்கிழமை மாலை 6-30 மணி

இடம்: சுன்னாகம் சந்தை மைதானம்

நிகழ்ச்சி: கருத்தரங்கு, பட்டிமன்றம், வீடியோ படக் காட்சி, நாடகம் என்பன இடம்பெறும்.

பட்டிமன்றம்

'நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா/இல்லையா"

நடுவர்

திரு இ. ஜெயராஜ் அவர்கள்

| அறிந்தோம் | அறியவில்லை |
|---|---|
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் | திரு. க. சிவராமலிங்கம் B A |
| திரு.எஸ். சிவலிங்கராசா MA | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. சோ. பத்மநாதன் | திரு. த. சிவகுமாரன் |

'போரம்மா' வீடியோ படக்காட்சி

'சந்தனக்காடு' நாடகம்

[விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகம்

விளம்பர அன்பளிப்பு:-

சக்தி மருந்தகம்
சுன்னாகம் (சி-7708)



## வலி. கிழக்கு வர்த்தகர் சங்கம்

[கோப்பாய் வட்டப் பிரிவு]

சகலதுறை வர்த்தகர்களுக்குமான

## கருத்தரங்கு

இடம்: நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபம்

காலம்: 15-10-93 வெள்ளிக்கிழமை பி. ப. 4மணி

மேற்படி சங்க எல்லைப்பிரப்பிற்குட்பட்ட சகலதுறை வர்த்தகர்களையும் பிற்பகல் தங்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டி இக் கருத்தரங்கின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்:

தலைவர் [6295] செயலாளர்


## மரண அறிவித்தல்கள்

### திரு.செல்லத்துரை நடராசா

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராசா (சாவகச்சேரி மினிபஸ் ஒன்றிய நேர கவனிப்பாளர்) 14-10-93 அன்று காலமானார். அன்னார் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை பத்மாவதியின் அன்புக் கணவரும், திருக்குமரன், பிரபாகரன், குமுதாயினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-10-93) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி — மனைவி பத்மாவதியும், தென்மராட்சி சிற்றூர்தி சேவை ஒன்றியத்தினரும்.

(6294)

### திரு. செல்லத்தம்பி இரத்தினகோபால்

தண்ணீரூற்று, முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செல்லத்தம்பி இரத்தினகோபால் 9.10.93 அன்று அகாலமரணமானார். இவர் திருமதி சிவமணியின் அன்புக் கணவரும், செல்வி அனுஷர, செல்வன் முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
699/1 கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். — கமலினி பவளகாந்தன்

(6296)

## புகைப்பட கண்காட்சி

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை சித்திரிக்கும் மாபெரும் புகைப்படக் கண்காட்சி நாளையும் நாளையமறுதினமும் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதனை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

## எழுதுவினைஞர் நியமனம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்திலிருந்து வடக்கு - கிழக்கு மாகாண சபை எழுதுநர் சேவைக்கும் அதனோடிணைந்த சுட்டெத்தாளர் / சுருக்கெழுத்தாளர் சேவைகளுக்கும் 1993 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் தோற்றி 135 புள்ளிகளுக்கு மேல் பெற்று நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கு 19-10-93 இலிருந்து நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

## அழகக்கோன் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா இராஜினாமா செய்ததை யடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு யூ.எஸ் அழகக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக போட்டியிட்டவர். மேலும் இவர் மாகாணசபை உறுப்பினராக இருந்துவந்தவர்.

**எழுது**
வேண்டும்.

இவ்வாறான 92 பேருக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வட-கிழக்கு மாகாணசபை அதிகாரிகளினால் இந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [சி], [பா]

**தனது**
பொறுப்பாளரிடம் போராளியாக இணைத்தார்.

"என்னுடைய அடுத்த மகனும் வீரச்சாவு எய்தினால் நானும் போர்களத்துக்கு வருவேன்" என அவர் உணர்ச்சி ததும்பக் கூறினார். அவர் தனது மகனுக்கு உணர்ச்சி பூர்வமாக விடை கொடுத்தார். (86)

**மோட்டார்**
தத்தமது குடும்ப அட்டைகளையும் தவறாது எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் வார நாள்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 3.30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 தொடக்கம் 1.00 மணி வரையும் தொடர்பு கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.